# வேலணை வேட்கை

## மலர் – 06

## தேசிய வாசிப்பு மாதம் 2024
## சிறப்பு மலர்

### வேலணை பொது நூலகம்
### வேலணை பிரதேச சபை

# மலரின் வாசனையின் உள்ளே

- நூலக சேவைகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- தீவகம் தெற்கு வேலணையின் சிறப்புக்கள்
- வாசிப்பின் முக்கியத்துவம்
- இன்றைய காலத்தின் தேவைப்பாடுகளில் சனசமூகநிலையத்தின் அவசியத்தன்மை
- 21ம் நூற்றாண்டில் டிஜிட்டல் நூலகத்தின் பயன்பாடு
- ஆசிரியத்துவத்தில் வாசிப்பின் முக்கியத்துவம்
- கற்றலின் உன்னதமான கருவி வாசிப்பு
- கிறிஸ்தவ கல்வித்துறையில் வாசிப்பின் முக்கியத்துவம்
- வெற்றியின் தடங்களில் பதிந்திருக்கும் வாசிப்பு
- செவியின்பத்தில் மூழ்கிய யாழ்ப்பாணம் இன்று புவியின்பத்தில் ஊறியதோ?
- நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு
- மருவிச் செல்கிறது......
- வாசிப்பற்ற தேசம்.
- தொலைந்து போன வாசிப்பு
- போதையின் பாதையில் இருந்து விடுபடுவோம் மேதைகளாய் உருவாகுவோம்
- உலகை வெல்ல வாசிப்பே சிறந்த வழி



# வேலணை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி

சப்த தீவுகளில் ஒன்றாக விளங்கும் வேல் அணைத்த வேலணை பதியிலே அமைந்து இருக்கும் திணைக்களங்களில் ஒன்றாக விளங்கும் பிரதேச சபையானது இன்று தனது பொது நூலகத்தின் ஊடாக வேலணை வேட்கை யின் ஆறாவது மலரினை வெளியிட உள்ளதை அறிந்து மிகவும் பெருமை கொள்கிறேன்.

இன்றைய கால கட்டத்தில் ஒரு மனிதனுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவது கல்வி, செல்வம், வீரம். இதில் நாங்கள் கல்வியை ஆளுமையாக கற்றுக் கொண்டால் மற்றைய செல்வம், வீரம் என்பதை பெற்று விடலாம். இக்கல்வியை ஒரு மனிதன் கற்றுக் கொள்வதானால் பாடசாலை கல்வி மட்டும் போதாது. உலகப்படிப்பு என்று சொல்லப்படும் அறிவையும் கற்றுக்கொள்ளல் வேண்டும். உலக அறிவு என்பது பல எழுத்தாளர்களால் ஆக்கம் செய்யப்பட்டு வெளிவருகின்ற புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றை வாசிப்பதன் வாயிலாகவே பெற்றுக்கொள்ள பேருதவியாக உள்ளது.

இம் மலரான வேலணை வேட்கை வெளிவருவதில் ஒத்தாசையாக விழங்கிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். இம்மலரினை ஆறாவது தடவையாக பதிப்பிக்கின்ற வேலணை பொது நூலகத்துக்கும், சபையின் செயலாளர் அவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவிப்பதோடு இவ் மலரானது வருடா வருடம் வெளிவர பெருங்குளம் முத்துமாரி அம்மன் வழித்துணையாக நிற்க பிராத்தனை செய்கிறேன். முத்துமாரி அம்மன் துணை எப்போதும் தங்களோடு தங்குவதாக.

**நன்றி.**

**சிவஸ்ரீ. இ. ரமேஷ்வரக்குருக்கள்.**
**வேலணை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்**



# மண்கும்பான் ஜிம்மா பள்ளிவாசல் மௌலவி அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி

கருவறை முதல் கல்லறை வரை மனித வாழ்க்கையினை கல்வி இன்றி நகர்த்த முடியாது. கல்வி என்பது மிக அவசியமானது ஒன்றாக திகழ்கிறது.

இறைவன் மனிதனை படைப்பதற்கு முன்பே அவனுக்கு தேவையானதை உருவாக்கினார். இதில் அவன் சுயமாய் சிந்திக்கும் ஆற்றல்களை பெற்றுக்கொள்ள கல்வியை அவன் பெற வழிவகுத்தான். அனைத்து மதங்களும் அன்பை பிரதானமாய் கூறுவது போல கற்றலையும் பிரதானமாய் போதிக்கிறது. இந்த கற்றலின் தேவைப்பாடு இன்றைய காலத்தின் மிகப்பெரும் தேவையாகவும், தேடலாகவும் காணப்படுகிறது.

மனிதனின் உருவாக்கம் கடவுளால் நிழந்தது என்றாலும், அவனின் உருவாக்கலில் கல்வியின் பங்கு பெரிதானதால் மனிதனின் உண்மையான பெற்றோர் கல்வி தான். அந்த பெற்றோருக்கு கொடுக்கும் கண்ணியம் நாம் பெற்றுக்கொள்ளும் கல்வியையும் அதனோடு இணைந்த வாசிப்பையும் சரிவர நிறைவேற்றுவதும் மேற்கொள்ளலும் தான். மதங்கள் அனைத்தும் அதன் புனித நூல்களை இறைவன் அருளிய கொடையாகவே பார்க்கிறது. அந்த உன்னத கொடையினை சரிவர பேணுவதன் வாயிலாகவே இறைவனோடு இன்புற்றிருக்க முடிகிறது.

வேலணை வேட்கையின் ஆறாவது மலரினை வெளியிடும் வேலணை பொது நூலகத்தையும், பிரதேச சபையையும் பாராட்டுகிறேன். இதன் வெற்றியின் மகிழ்வில் இறைவன் துணையிருக்கட்டும். இதன் உருவாக்கத்தின் நோக்கம் சரிவர நிறைவேற இறைவனை வேண்டுகிறேன். அத்தோடு இம்மலர் மீண்டும் வெளிவர எனது பாராட்டுக்களும் வேண்டுதல்களும்.

**நன்றி!**

**மௌலவி- இக்பால் சித்திக்.**
**மண்கும்பான் ஜிம்மா பள்ளிவாசல்**
**வேலணை.**



# பிரதேசசபை செயலாளரின் வாழ்த்துரை

வேலணை பிரதேச சபையானது தனது பிரதேச அபிவிருத்தியினை அனைத்து வகையிலும் வெளிப்படுத்தி வருகிறது. இந்த வகையில் வாசிப்பு மாத செயற்பாடுகளிலும் தனது செயற்பாடுகளால் சபையின் வலிமைப்பாடுகளிலும் முக்கியத்துவமிக்க செயற்பாடுகளை முன்னிறுத்தியும் வருகிறது. இதன் வெளிப்பாடாக வேலணை பொது நூலகத்தின் ஆண்டு வெளியீடான ''வேலணை வேட்கை'' மலரின் ஆறாவது மலருக்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமிதமும் மட்டற்ற மகிழ்ச்சியும் அடைகிறேன்.

''மனிதனின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு புத்தகங்கள்'' என்று கூறும் அல்பர்ட் ஐன்ஸ்டீன் கருத்துப்படி நூல்களின் முக்கியத்துவம் புலனாகி நிற்கிறது. கிடங்குகளில் பூட்டிக்கிடந்த புத்தகங்கள் அச்சு இயந்திர வளர்ச்சியால் எல்லோர் கைகளிலும் கிடைக்கக் கூடியதான மாற்றம் நிகழ்ந்தது. இக்காலமே தகவல் யுக அபிவிருத்தியின் வசந்த காலமாய் அமைந்தது. சிறந்த சமுதாய வளர்ச்சியில் தன் பங்கினை வலுவானதாய் ஆற்றிவந்த நூலகங்கள் நவீன தொடர்பு சாதன வளர்ச்சி வாசிப்பின் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதை அவதானிக்கவே முடிகிறது.

''உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே'' என்னும் இந்த ஆண்டிற்கான கருப்பொருளுக்கு அமைவாக தனது செயற்பாடுகளை செயற்படுத்தி வரும் வேலணை பொது நூலகம், தனது வருடாந்த செயற்பாடாக இந்த சிறப்பு மலரினை வெளியிட்டு நிற்கிறது. 2019ம் ஆண்டு தொடக்கம் மலர் வெளியிடப்பட்டு வருவதோடு இந்த ஆண்டும் பல சிறந்த ஆக்கங்களோடு ஆறாவது மலரினையும் கைகளில் தவழவிட்டுள்ளதை மகிழ்வோடு எண்ணுகிறேன்.

இந்த மலரின் வெளியீட்டு வெற்றியில் பலரின் கூட்டு முயற்சிகள் ஒருங்கிணைந்தே காணப்படுகிறது. இந்த பக்குவப்படுத்தலில் துணைக்கரம் கொடுத்த அனைவரையும் பாராட்டுவதோடு, தாங்கிவரும் கட்டுரைகளின் வாயிலாய் வெளிப்படும் சமூக அக்கறையின் தன்மை பலரையும் சென்றடைய வாழ்த்துக்களையும் பகிர்த்து கொள்கிறேன்.

**திரு. தியாகராசா தியாகச்சந்திரன்**
**செயலாளர்**
**வேலணை பிரதேச சபை**



# வேலணை உப அலுவலக பொறுப்பதிகாரியின் உள்ளத்திலிருந்து

“வாசிப்பு மொழியை செழுமைப்படுத்தும், பிழையில்லாது எழுதக் கற்றுக்கொடுக்கும்” என்கின்ற முதுமொழிக்கேற்ப இன்றைய காலத்தின் தேவைக்கு வாசிப்பு முக்கியமானது என்பது சற்று புலப்படவே ஆரம்பிக்கிறது. வேலணை பொது நூலகமானது வேலணை பிரதேசத்தின் அறிவுத் தேவையை ஈடுசெய்யும் ஒரு மையமாகும். வாசிப்பு மாத செயற்பாடுகளில் திறன்பட தனது பணியை நிறைவு செய்து தனது இறுதி முயற்சியான வேலணை வேட்கை மலரினையும் பிரசுரித்து மகிழ்கிறது. இந்த முயற்சியானது ஆறாவது ஆண்டாகவும் நிகழ்வதை இட்டு பெருமை கொள்வதோடு வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொள்கிறேன்

“இறவாப்புகழுடைய நூல்கள் தமிழ் மொழியில் உருவாகிட வேண்டும்” என்று கூறிய மகாகவி போல் அறிவினை புலப்படுத்தும் சிறப்பு மலரின் வெளியீடும் அமைவது மகிழ்வே. இந்த முயற்சி காலத்தின் தேவைப்பாடானதாகும். இவ்விடயம் இன்னும் தொடர் வெளியீடாய் அமைதல் வேண்டும். 2024ம் ஆண்டின் வாசிப்பு மாத செயற்பாட்டின் சிறப்பு வெளியீடாய் வெளிவரும் இச்சஞ்சிகை பலரின் சிறந்த கட்டுரைகளை உள்ளடக்கியே உள்ளது. இவற்றின் மூலம் அறிவுத்தேடல் மிக்க சமூகம் பயன் பெறும் என்பதில் ஐயப்பாடில்லை.

இதன் முயற்சிகளுக்கு துணைநின்ற ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக்கள் அத்தோடு மீண்டும் ஆண்டுதோறும் இந்த மலர் வெளிவந்து வேலணை பிரதேச சபையின் செயற்பாடுகளை வெளிப்படுத்தவும், வெற்றியின் பிரசுரிப்பாய் அமையவும் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன். நாளைய சமூகத்திடம் நாம் விட்டு செல்ல அறிவு தகவல்களையும், ஆவணங்களையும் எழுத்துருவாக்குவோம். வரலாறு தொலைத்த சமூகமாய் காணாமல் போகாமல், ஆவணங்களை எடைகளுக்கு விலைபேசி விற்கும் மனிதக் கூட்டமாய் மாறியும் போகாமல் ஆவணங்களை அடையாளப்படுத்தும் சமூகமாய் மாறிக்கொள்ளுவோம்.

**அ.டிக்சன்**
**பொறுப்பதிகாரி,**
**வேலணை உப அலுவலகம்**



# நூலகரின்
# உள்ளத்தில் இருந்து

"ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது" என்றார் ப்ரெஞ்சு எழுத்தாளர் விக்டர் ஹியூகோ. இன்றைய இளம் தலைமுறையினரின் பிரதான பொழுதுபோக்கு சமூக ஊடகங்களாக மாறிப்போயுள்ள காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களின் கைகளில் தவள்வதற்காக புதியதொரு சிறப்பு மலர் வெளிவந்துள்ளது. இந்த சஞ்சிகையும் எங்களின் மாற்றங்களுக்காக எதை செய்து விடப்போகிறது என்பது பலரின் கேள்வியாக இருக்கும் என்பது எவ்வித ஐயப்பாடும் இல்லாததே. இருந்த போதிலும் இந்த சஞ்சிகையின் ஆக்கங்கள் பெறுமதியானவை. பலரின் சிந்தனைக்களத்தில் தாண்டவமாடியவை எழுத்துருவாக்கத்திற்கு வந்துள்ளது என்பது மகிழ்வு நிரம்பிய ஒன்றே.

புத்தகங்கள் பரந்து விரிந்த உலகை அறிமுகப்படுத்தும் பல தகவல்களை எம் கர சுருக்கத்துக்குள் பெற்றுத்தரவல்லது என்பது பல அறிஞ்ஞர்களின் கருத்தமைப்பே. இருந்தாலும் இன்றைய வாசிப்பின் குறைபடு தன்மை என்பது எம் சமூகத்தின் சாபக்கேடே. வாசிப்பு என்பது அதன் வடிவத்தை மாற்றியமைதுள்ளது. தாழ்களில் தவழ்ந்திருந்த எழுத்து வடிவத்தை வாசித்த எம்மவர்களின் வாசிப்பு தொடு திரைககளுக்குள் சிதறுண்ட எழுத்து வடிவங்களையும் ஆதாரமற்ற ஆதாரங்களையும் கூர்ந்து பார்க்கவைத்துள்ளது. புதிய வாசிப்பு முறையில் உள்ள தவறுகள் திரும்பி பார்க்கப்பட வேண்டியதொன்றே. இதை நாம் செய்ய மறுத்தால் நாளைய சமூகத்திடம் கையளிக்க வெறுமையே மிஞ்சியிருக்கும்.

வேலணை வேட்கை தனது ஆறாவது குழந்தையை இப் பூமிக்கு பிரசவிக்கிறது. ஒரு குழந்தையின் பிறப்பு எவ்வாறாக ஒரு மகிழ்வை ஏற்படுத்துகின்றதோ அதே போல் ஒரு மகிழ்வு வேலணை பொது நூலகமும் அடைந்து கொள்கிறது. இக்குழந்தை உங்களின் கைகளில் தவழ பலரது முயற்சி மறைந்தே உள்ளது. இந்த முயற்சிக்கு கைகொடுத்த அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள் பல. இதில் தாங்கியுள்ள ஆக்கங்கள் ஒவ்வொன்றும் இன்றைய காலத்தின் தேவைகருதியதே. காந்தியை கிறிஸ்தவத்தை அறிய ஆவல்பட வைத்தது வீதியில் கிடந்த ஒரு தாள்தான். அதே போல் ஏதாவது ஒரு மனதில் இந்த மலரின் ஆக்கங்கள் ஒரு தீப்பொறியை ஏற்படுத்தாது செல்லாது.

வேலணை பொது நூலகதின் செயற்பாடுகள் ஒவ்வொன்றோடும் துணைநின்ற சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். சிறப்பு மலருக்கு கட்டுரைகளை வழங்கிய ஒவ்வொருவருக்கும் மனமார்ந்த நன்றிகள். உங்களின் மனதியல் கருத்துக்களை வேலணை வேட்கை மலர் தாங்கிவருவதில் மகிழ்ந்து கொள்கிறது.

**கீ. மேரியன் நித்தியானந்தா**
**நூலகர்**
**வேலணை பொது நூலகம்**

# நூலக சேவைகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் (Information and Communication Technology (ICT) in Library Services)

**அறிமுகம்**

நூலகச் சேவைகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) ஆனது தகவல்களை அணுகுதல், ஒழுங்கமைத்தல் மற்றும் பரப்புதல் போன்றவற்றில் புரட்சியை ஏற்படுத்துவதன் மூலம் மிகப்பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. நூலகங்களுக்கு அவற்றின் சேவைப்பரப்பை விரிவுபடுத்தவும், சேவைபெறுனர்களின் அனுபவங்களை மேம்படுத்தவும், இன்றைய எண்ணிம யுகத்தில் அதிகரித்து வரும் தகவல் தேவைகளுக்கு ஏற்ப புதிய வழிகளைத் திறந்துள்ளது. எண்ணிம நூலகங்கள், நிகழ்நிலைத் தரவுத்தளங்கள், மின்னணு வளங்கள் மற்றும் ஊடாடும் தளங்கள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் நூலகங்கள் எங்கிருந்தும் பரந்த அளவிலான தகவல் தேடுதலுக்கான தடையற்ற அணுகலை வழங்குகின்றன. நூலகச் சேவைகளில் ICT இன் பிரயோகமானது தகவல் மீட்டெடுப்பின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை (efficiency and effectiveness) மேம்படுத்தியுள்ளதுடன் தகவல் தேடுதலுக்கான ஒத்துழைப்பு, அறிவுப் பகிர்வு மற்றும் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றையும் எளிதாக்கியுள்ளது.

**நூலக சேவைகளை வழங்குவதில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்கு**

நூலக சேவைகளை வழங்குவதில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் (ICT) பங்களிப்பானது நூலகங்கள் எவ்வாறு இயங்குகின்றன மற்றும் அவற்றின் வாசகர்களுக்கு எவ்வாறு எவ்வாறான சேவைகளை செய்கின்றன என்பதில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமானது எண்ணிம நூலகங்கள், நிகழ்நிலைத் தரவுத்தளங்கள் மற்றும் மின்னணு வளங்களைச் செயல்படுத்துவதன் மூலம் தகவல் அணுகலை புரட்சிகரமாக்கியுள்ளதுடன் அறிவின் அணுகலையும், அதன் கிடைக்கும் தன்மையையும் விரிவுபடுத்தியுள்ளது. ICT

கருவிகள் மற்றும் அமைப்புகளுடன், நூலகங்கள் தங்கள் சேகரிப்புகளை திறமையாகவும் வினைத்திறனுடனும் நிர்வகிக்கக்கூடியதாகவுள்ளது. அது மட்டுமன்றி தகவல் மீட்டெடுப்பை மேம்படுத்தியுள்ளதுடன் தனிப்பட்ட வாசகர் தேவைகளுக்கு ஏற்ப தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளையும் வழங்குவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. ICT ஆனது நிகழ்நிலைத் தளங்கள், மெய்நிகர் சந்திப்பு இடங்கள் மற்றும் ஊடாடும் கருவிகள் மூலம் கூட்டுறவு முறையிலான கற்றல் மற்றும் ஆராய்ச்சியையும் எளிதாக்குகின்றது. தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பம் நூலகச் சேவைகளுக்கான தொலைநிலை அணுகலுக்கான வழிகளைத் திறந்துதவுகின்றது. எந்த நேரத்திலும் எங்கிருந்தும் சரியான ஆதாரங்கள் மற்றும் உதவிகளுடன் தகவல் தேடலில் ஈடுபடுவதற்கான இயலுமையினை வாசகர்களுக்கு வழங்குகின்றது.

தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) நூலக சேவைகளை வழங்குதல், நூலகங்கள் செயற்படும் விதத்தில் புரட்சியை ஏற்படுத்துதல் மற்றும் பயனர் அனுபவத்தை மாற்றியமைப்பதில் இன்றியமையாததாகிவிட்டது. அந்தவகையில் நூலக சேவைகளில் ICT வகிக்கும் சில முக்கிய பாத்திரங்கள் வருமாறு:

❖ **தகவலுக்கான மேம்பட்ட அணுகல்:**

ICT ஆனது நூலகங்களை பல்வேறுபட்ட தகவல் சாதனங்களுக்கான தடையற்ற அணுகலை வழங்க உதவுகின்றது. அதாவது எண்ணிம நூலகங்கள், நிகழ்நிலைத் தரவுத்தளங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் போன்றவற்றினூடாக வாசகர்கள் தகவல்களைத் தேடவும் மீட்டெடுக்கவும் அவற்றினைத் தொலைநிலையில் அணுக வசதியேற்படுத்துவதன் மூலம் புவியியல் தடைகளை உடைத்து, அறிவைப் பெறுவதற்கான நிலையினை வழங்குகின்றன.

❖ **திறமையான தகவல் மீட்பு**

ICT கருவிகள் மற்றும் அமைப்புகள் திறமையான நூலக தகவல்களை மீட்டெடுக்க உதவுகின்றன. நிகழ்நிலைப் பட்டியல்கள், தேடுபொறிகள் மற்றும் கண்டுபிடிப்பு தளங்கள் மூலம் வாசகர்களுக்கு தேவையான பொருட்களை விரைவாகக் கண்டுபிடித்து அணுக உதவுகின்றன. மேம்பட்ட தேடல் அம்சங்கள், வடிகட்டல்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகள் மூலம் தேடல் முடிவுகளின் துல்லியம் மற்றும் பொருத்தத் தன்மையை மேம்படுத்தி வாசகர்கள் மிகவும் பொருத்தமான சாதனங்களை விரைவாகக் கண்டறிய உதவுகின்றன.

❖ **எண்ணிம பாதுகாப்பு மற்றும் காப்பகம்:**

ICT ஆனது பெறுமதிமிக்க எண்ணிம உள்ளடக்கத்தைப் பாதுகாக்கவும், காப்பகப்படுத்தவும் நூலகங்களுக்கு வழியேற்படுத்துகின்றது. அத்துடன் நீண்ட கால அணுகல் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாத்தல் என்பதையும் உறுதி செய்கின்றது. மேலும் எண்ணிம பாதுகாப்பு நுட்பங்கள், இலத்திரனியல் தரவுத் தரநிலைகள் மற்றும் எண்மிய மயமாக்கல் முயற்சிகள் முக்கியமான ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள், படங்கள் மற்றும் பல்லூடக சாதனங்கள் போன்றவற்றைச் சேமித்து வருங்கால சந்ததியினருக்கு கிடைக்கச் செய்வதை உறுதி செய்கின்றன.

❖ **கூட்டுறவு முறையிலான கற்றல் மற்றும் ஆராய்ச்சி:**

ICT ஆனது நூலகங்களுக்குள் கூட்டுறவு முறையிலான கற்றல் மற்றும் ஆராய்ச்சிகளை எளிதாக்குகின்றது. நிகழ்நிலைத் தகவல்தொடர்பு கருவிகள், மெய்நிகர் சந்திப்பு இடங்கள் மற்றும் கூட்டுத் தளங்கள் ஆகியவை மூலம் வாசகர்கள் குழு திட்டங்களில் ஈடுபடவும், வளங்களைப் பகிர்ந்து கொள்ளவும், சகாக்கள் மற்றும் நிபுணர்களுடன் ஒத்துழைக்கவும் உதவுகின்றன. இது ஒரு துடிப்பான கற்றல் சமூகத்தை வளர்ப்பதுடன் அறிவுப் பரிமாற்றம் மற்றும் கூட்டுறவு முறையிலான கற்றலையும் ஊக்குவிக்கின்றது.

❖ **தனிப்பயனாக்கப்பட்ட சேவைகள் மற்றும் பரிந்துரைகள்:**

வாசகர் விருப்பத்தேர்வுகள் மற்றும் நடத்தை அடிப்படையில் தனிப்பயனாக்கப்பட்ட சேவைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்க நூலகங்களுக்கு ICT உதவுகின்றது. வாசகர் சுயவிபரங்கள், இரவல் பெற்ற விபரங்கள் மற்றும் தரவு பகுப்பாய்வு ஆகியவை நூலகங்களுக்கு வாசகர் தேவைகள் மற்றும் ஆர்வங்களைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. இதன் மூலம் அவை தனிப்பயனாக்கப்பட்ட பரிந்துரைகள், தொகுக்கப்பட்ட பட்டியல்கள் மற்றும் வடிவமைக்கப்பட்ட சேவைகளை வழங்க வழிசமைத்து ஒட்டுமொத்த வாசகர் அனுபவத்தை மேம்படுத்துகின்றது.

❖ **மின் கற்றல் மற்றும் எண்மிய கல்வியறிவு:**

ICT ஆனது நூலகங்களுக்குள் மின்-கற்றல் முயற்சிகளை ஊக்குவிக்கின்றது. நிகழ்நிலைப் படிப்புகள், கல்வி வளங்கள் மற்றும் ஊடாடும் கற்றல் தளங்களுக்கான அணுகலை வழங்குகின்றது. எண்மிய தகவல் வளங்களை திறம்பட

வழிநடத்துவதற்கும், பயன்படுத்துவதற்கும் தேவையான திறன்களை மேம்படுத்த வாசகர்களுக்கு உதவும் வகையில், எண்மிய கல்வியறிவு திட்டங்கள் மற்றும் பயிற்சி அமர்வுகளை நூலகங்கள் வழங்க முடியும்.

❖ **தொலை மற்றும் நகர் சேவைகள்:**

ICT ஆனது நூலகங்கள் தங்கள் சேவைகளை இயற்பியல் இடத்திற்கு அப்பால் நீடிக்க உதவுகின்றது. அதாவது நகர் பயன்பாடுகள், மெய்நிகர் குறிப்பு சேவைகள் மற்றும் நிகழ்நிலை உரையாடலுக்கான ஏற்பாடுகள் ஆகியவை வாசகர்களை எந்த நேரத்திலும் எங்கிருந்தும் உதவி பெறவும், ஆதாரங்களை அணுகவும் மற்றும் நூலக சேவைகளில் ஈடுபடவும் உதவுவதுடன் இந்த நெகிழ்வுத்தன்மை வாசகர்கள் நூலக சேவைகளுடன் வசதியாக இணைக்க முடியும் என்பதையும் உறுதி செய்கின்றது.

**முடிவுரை**

நூலகங்களில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பது ஒரு நவீனமயமாக்கல் போக்கு மட்டுமல்ல, எண்ணிம முறையில் இயங்கும் இன்றைய சமூகத்தின் தேவைகளுக்கு ஒரு மூலோபாய பதிலுமாகும். புத்தகங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த நூலகங்கள் இன்று வாசகர் அனுபவங்களை மேம்படுத்துவதற்கும், அணுகலை விரிவுபடுத்துவதற்கும், சமூக மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கும் தொழில்நுட்பத்தை தழுவிய மாறும் நிறுவனங்களாக மாறிவிட்டன. நூலகங்களில் ICT இன் தேவைகள் அதன் மாற்றும் ஆற்றலை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. எண்ணிம வளங்கள் பெருகிய நிலையில் மெய்நிகர் சேவைகள் மற்றும் கூட்டுத்தொழிற்பாட்டு இடங்களின் மையமாக நூலகங்கள் மாறுவதால், அவை அறிவுப் பரவல் மற்றும் சமூக ஈடுபாட்டின் இன்றியமையாத தூண்களாக தங்கள் நிலையை உறுதிப்படுத்துவதற்கு ICT முக்கிய பங்கு வகிக்கின்றது.

**கலாநிதி ச. சண்முகதாசன்**
**பதில் நூலகர்**
**வவுனியாப் பல்கலைக்கழகம்**

# தீவகம் தெற்கு
# வேலணையின் சிறப்புக்கள்

இலங்கையின் வடக்கு மாகாணத்திலே யாழ்ப்பாண மாவட்டத்திலே தீவகம் என்னும் பிரிவுக்குள் நெடுந்தீவு, ஊர்காவற்துறை, வேலணை, காரைநகர் ஆகியன உள்ளடங்கியுள்ளன. தீவகம் என்னும் சொல்லுக்கு விளக்கு என்று பொருள் ஆகும். வேலணை பிரதேசமானது யாழ் மாவட்டத்திற்கு தென்மேற்கே அமைந்துள்ளது. இது 9.685 பாகை வடக்கு 79.908 பாகை கிழக்கு அமைவிடத்தைக் கொண்டது. யாழ்ப்பாணத்துக்கு 15 கிலோமீற்றருக்கு தொலைவில் அமைந்துள்ளது.

90.699 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இப்பகுதி வடக்கே யாழ்ப்பாண கடல் நீரேரி மற்றும் தீவகம் வடக்குப் பகுதியின் கடல் பகுதியையும் கிழக்கு, தெற்கு திசைகளில் கடல் பகுதியையும் மேற்கே தீவகம் வடக்குப் பகுதியின் கடல் பகுதியையும் கொண்டமைந்துள்ளது. 30 கிராம சேவகர் பிரிவைக்கொண்ட இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகை 16598 ஆகும். மொத்த குடும்ப எண்ணிக்கை 5250 ஆகவும் மொத்த ஆண்கள் சதவீதம் 49 ஆகவும் பெண்கள் சதவீதம் 51 ஆகவும் காணப்படுகிறது.

இப்பகுதியில் 71 கிராமங்களில் சமூகப், பொருளாதார, மனிதவள செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மொத்த சனத்தொகையில் இந்துக்கள் 74.2 வீதம் கிறிஸ்தவர்கள் 24.4 வீதம், இஸ்லாமியர்கள் 1.39 வீதம், ஏனையோர் 0.01 வீதம் ஆகவும் காணப்படுகின்றனர். மொத்த நிலப்பரப்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபைகளின் அறிக்கைப் படி வீதிகளின் மொத்த நீளம் 363.124 கிலோ மீற்றர் ஆகும். A தரத்து வீதி 34.02 கிலோ மீற்றர் (9.4 வீதம்), B தரத்து வீதி 06.60 கிலோ மீற்றர் (1.81 வீதம்), C தரத்து வீதி 65.14 கிலோ மீற்றர் (18 வீதம்) D தரத்து வீதி 0.242 கிலோ மீற்றர் (0.6 வீதம்), ஏனையவை 254.944 கிலோ மீற்றர் (70.2 வீதம்) ஆகக் காணப்படுகின்றது. A,B தரத்து வீதிகளானது வீதி அதிகார சபைக்கு உரித்துடையவை. C,D தரத்து வீதிகள் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு உரியவை.

தீவகம் மொத்த நிலப்பரப்பில் மண்டைதீவு 12.16 வீதம், அல்லைப்பிட்டி 7.02 வீதம், மண்கும்பான் 7.66 வீதம், வேலணை 25.84 வீதம், சரவணை 05.64 வீதம், புங்குடுதீவு 36.08 வீதம் நயினாதீவு 05.17 வீதம் பரப்பளவைக் கொண்டமைந்துள்ளது. இதில் மண்டைதீவு 3 கிராம சேவகர் பிரிவுகளையும், அல்லைப்பிட்டி 1 கிராம சேவகர் பிரிவுகளையும், மண்கும்பான்1 கிராம சேவகர் பிரிவையும், வேலணை 8 கிராம சேவகர் பிரிவுகளையும், சரவணை 2 கிராம சேவகர் பிரிவுகளையும் புங்குடுதீவு 12 கிராமசேவகர் பிரிவுகளையும், நயினாதீவு 3 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டமைந்துள்ளன. இதனை பிரதான 4 பகுதிகளாக பிரித்தால் மண்டை தீவு, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு என வகைப்படுத்தலாம். சனத்தொகையைப் பொறுத்த மட்டில் மொத்த சனத்தொகை 16598 (2021) ஆகவும் மொத்தக் குடும்பம் 5250 ஆகவும் காணப்படுகிறது.

பொருளாதார நிலமைகளைப் பொறுத்த வரையில் மீன்பிடிக்கைத்தொழில், விவசாயம், பனைசார் தொழில் உற்பத்திகள் மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தி எனப்பல தொழில்கள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. நெல் பிரதான பயிராகவும் மிளகாய் மற்றும் ஏனைய காய்கறி வகைகள், பணப்பயிரான புகையிலை ஆகியன பருவகாலத்திற்கு ஏற்றாற்போல பயிரிடப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டு வருமானம் ஈட்டப்படுகின்றது. வருமான அடிப்படையிலும் குடும்ப எண்ணிக்கை அடிப்படையிலும் பின்வருமாறு நோக்குவோம்.

**யூட் அல்போன்சஸ் மேவிஸ் ஜீன்சியா**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம்**
**தென்மராட்சி**

- குடும்ப எண்ணிக்கை அடிப்படையில் சனத்தொகை 2021

| குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை | மொத்தம் | வீதம் |
|---|---|---|
| 01 | 1011 | 19.25 |
| 02 | 1132 | 21.56 |
| 03 | 957 | 18.22 |
| 04 | 917 | 17.46 |
| 05 | 767 | 14.6 |
| 06 | 335 | 6.38 |
| 07 | 111 | 02.11 |
| 08 | 18 | 0.34 |
| 09 | 2 | 0.03 |
| மொத்தம் | 5250 | 100 |

மூலம் - புள்ளிவிபரத்திரட்டு பிரதேச செயலகம் வேலணை 2021

- வருமான அடிப்படையில் குடும்ப எண்ணிக்கையும் அதன் வீதமும்

| வருமானம் ரூபாவில் | குடும்பம் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 6000 | 2007 | 38.0 |
| 6001 - 10000 | 923 | 17.5 |
| 10001 - 15000 | 919 | 17..4 |
| 15001 - 20000 | 511 | 9.7 |
| 20001 - 25000 | 328 | 6.2 |
| 25001 - 40000 | 370 | 7 |
| 40001 - 50000 | 129 | 2.4 |
| 50001 - 75000 | 53 | 1 |
| 75001 - 100000 | 10 | 0.2 |
| மொத்தம் | 5250 | 100 |

மூலம் - புள்ளிவிபரத்திரட்டு பிரதேச செயலகம் வேலணை 2021

- மொத்த குடும்ப எண்ணிக்கையில் சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளி குடும்பம்

| சமுர்த்திப் பயனாளி குடும்பம் | முத்திரைப் பெறுமதி | வீதம் |
|---|---|---|
| 716 | 1500 | 14.2 |
| 355 | 2500 | 7.0 |
| 1362 | 3500 | 27.1 |

மூலம் - புள்ளிவிபரத்திரட்டு பிரதேச செயலகம் வேலணை 2021

- இன ரீதியான அடிப்படையில்

| ஆண்டு | தமிழ் | இஸ்லாம் | சிங்களம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2010 | 99.318 | 0.670 | 0.011 | 100 |
| 2015 | 98.206 | 1.778 | 0.016 | 100 |
| 2020 | 98.66 | 1.38 | 0.018 | 100 |

மூலம் - புள்ளிவிபரத்திரட்டு பிரதேச செயலகம் வேலணை 2021

- மொத்த ஆண் பெண் தொகை வீதம் வயது அடிப்படையில்

| வயது | ஆண் வீதம் | பெண் வீதம் |
|---|---|---|
| 0-4 | 4.1 | 4.0 |
| 5-9 | 7.38 | 7.02 |
| 10-14 | 8.66 | 8.07 |
| 15-19 | 10.19 | 4.40 |
| 20-24 | 10.73 | 9.21 |
| 25-29 | 9.05 | 8.35 |
| 30-34 | 8.79 | 7.12 |
| 35-39 | 7.20 | 6.22 |
| 40-44 | 6.73 | 5.91 |
| 45-49 | 4.76 | 5.46 |
| 50-54 | 4.67 | 5.55 |

| | | |
|---|---|---|
| 55-59 | 4.15 | 5.51 |
| 60-64 | 4.1 | 5.01 |
| 65-69 | 3.47 | 4.16 |
| 70-74 | 2.90 | 1.13 |
| 74- | 3.04 | 4.73 |

**மூலம் - புள்ளிவிபரத்திரட்டு பிரதேச செயலகம் வேலணை 2021**

வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயன்முறைகளாக தென்னை, பனை மரங்களது கள்ளு சேகரித்தல், வீட்டுத்தோட்டம், ஆடு, மாடு வளர்ப்பு ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 2535.56 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறுபட்ட காரணிகள் விவசாய நடவடிக்கைகளை பாதிக்கின்றன. வளமற்ற மண், உப்புநீர், வளமற்ற உவர் மண், மண்ணரிப்பு, சேதமடைந்த கால்வாய்கள், குறிப்பிட்ட சில குளங்கள் புனரமைப்பு செய்யப்படாமையும் விவசாய பின்னடைவுக்கு காரணமாக அமைகின்றனவாகும்.

காலநிலை அமைப்புக்களைப் பொறுத்த மட்டில் வெப்பம் அதிகமாகவும் மழைவீழ்ச்சி மற்றும் ஈரப்பதன் குறைவாகவும் காணப்படுகின்றன. மொத்த மழை வீழ்ச்சி நாட்கள் 105 ஆகவும் மழைவீழ்ச்சியளவு 2043.33 ஆகவும் உள்ளன. ஐப்பசி (390 mm), கார்த்திகை (752.4 mm) மார்கழி (189.6 mm), தை (95.4 mm) ஆகிய மாதங்களில் அதிக மழை கிடைக்கின்றது. பங்குனி (1.6 mm) சித்திரை (110.4 mm), வைகாசி (95.4 mm) ஆகிய மாதங்களில் குறைந்தளவு மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. மழை நாட்களில் கிடைக்கப்பெறும் மழைநீரானது கடலோடு கலக்காது இருக்கவும், உவர் நீரானது உட்புகாமல் இருக்கவும் உவர்நீர் தடுப்பணைகள் பல அமைக்கப்பட்டு மழைநீரானது பாதுகாக்கப்படுகின்றது. சேமித்த நீரானது விவசாயம் உட்பட பல தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

வெப்பநிலையைப் பொறுத்தமட்டில் சித்திரை மாதத்தில் அதிகூடிய வெப்ப நிலையாக 33.2 பாகை செல்சியசும், மிகக் குறைந்த வெப்பநிலையாக தைமாதத்தின் 28.9 பாகை செல்சியசாகவும் காணப்படுகின்றன. வெப்பவீச்சு 4.3 பாகை செல்சியசாகவும் சராசரி வெப்பநிலை 31.4 பாகை செல்சியசாகவும் காணப்படுகின்றன. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, சரவணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பிரதேசங்களில் வானிலையும், காலநிலையும் யாழ்ப்பாணக்குடா நாடு நிலையோடு

ஒத்துக்காணப்படினும் மழைவீழ்ச்சி, பனித்தாக்கம், ஈரப்பதன் ஆகிய அம்சங்கள் ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது சற்றுக்குறைவாகவே காணப்படுவது குறிப்பிட்டு சொல்ல வேண்டிய விடயமாகக் காணப்படுகின்றன. தீவகத்தின் ஆரம்பகாலங்களில் இப்பிரதேசங்களில் நிலவிய காலநிலை பற்றிய ஆய்வுகள் ஆழமானதாக மேற்கொள்ளப்பட்டதுபோல தெரியவில்லை.

பருவக்காற்றுக்கள், மேற்காவுகை செயன்முறைகள், உகைப்பு மழைமூலம் இப்பிரதேசத்திற்கு மழை கிடைக்கின்றது. இடைப்பட்ட பருவப்பெயர்ச்சி காரணமாக ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அதிகமழை கிடைக்க வாய்ப்புக்கள் உருவாகின்றன. (Intermidiat Monsoon) வடகீழ்ப் பருவப்பெயர்ச்சி காற்றினால் (North East Monsoon) காரணமாக மார்கழி, தை, மாசி காலங்களில் அதிக மழை கிடைக்காவிட்டாலும் இக்காலங்களில் வங்காள விரிகுடாப்பகுதிகளில் ஏற்படும் தாழமுக்க சூறாவளி காரணமாக மழை உருவாகின்றது.

தென்மேல் பருவப்பெயர்ச்சி காற்றுக்கள் (South East MonSoon) காரணமாக வைகாசி தொடக்கம் புரட்டாதி வரை வரட்சிக்காலமாக காணப்படுகின்றன. இக்காலத்தில் கடுமையான நீர்த்தட்டுப்பாடு நிலவும். மனித உயிர்கள் மட்டும் அல்லாது பயிர்கள், பறவைகள், கால்நடைகள் ஆகியனவும் பாதிப்பை எதிர்கொள்கின்றன. இடைப்பட்ட பருவப்பெயர்ச்சிக் காலமான (Intermediate Monsoon) பங்குனி, சித்திரை மாதங்களில் வரட்சி நிலவியபோதும் மேற்காவுகை சுற்றோட்ட நிகழ்வு இடம்பெறுவது காரணமாக சிறிதளவு மழை கிடைக்கின்றது. கடல் நீரின் வெப்பம் காரணமாக இரவுநேர வெப்பநிலையில் மாறுபாடு காணப்படுகின்றது.

மண் கட்டமைப்பு நிலப்பயன்பாட்டை பொறுத்தமட்டில் பெரும்பான்மையான பகுதிகளில் சாம்பல் நிறமுடைய களி மண் உட்புறப்பகுதியில் காணப்படுகின்றன. ஏனைய இடங்களில் பழுப்பு சிவப்பு நிறம் மற்றும் களிமண் காணப்படுகிறது. இதன் காரணமாக பருவக்காற்று மற்றும் உகைப்பு மழைக்காலங்களில் நீர் உட்புகுவது குறைந்து மேற்பரப்பில் தேங்கி நிற்கின்றது. வரண்ட காலத்தின் தொடக்கத்தில் இது பல்வேறுபட்ட தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டாலும் வரட்சிக்காலத்தில் வெப்பத்தால் ஆவியாக்கப்பட்டு நீர் வரண்டுபோய்விடுகிறது. மேற்பரப்பு நிலப்பரப்பானது சமதளமாக தோன்றினாலும் புங்குடுதீவு, வீரமலைப் பகுதிகள் உயரமான இடத்தில் உள்ளன. மண்கும்பான், அல்லைப்பிட்டி சிறந்த மணல்பரப்புக்களாக உள்ளன. இப்பிரதேசத்தில் பல்வேறு நடவடிக்கைக்காகவும் இலாப நோக்கத்திற்காகவும் மண் அகழ்வு அதிகமாக

இடம்பெறுவதால் சூழலின் அழகு குறைவதோடு சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுவதால் மண் அகழ்வானது சட்டரீதியாக கட்டுப்படுத்தப்படும் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவில் சிறுத்தீவு, பள்ளத்தீவு, கன்னத்தீவு, குறிகட்டுவான் ஆகிய தீவுகளில் அரியவகைப் பறவையினங்கள் பருவகாலங்களில் வருகை தருவதுடன் குறிப்பிட்ட மாதங்கள் வரை அவ்விடத்தை தமது வாழ்விடமாக பயன்படுத்தியபின் வேறு இடங்களுக்கு செல்கின்றன.

கல்வி மற்றும் அதனுடன் இணைந்த பண்புகளை பார்ப்போமெனில் தேசிய பாடசாலைகள் எதுவும் இங்கு இல்லை. தமிழ் மொழிமூலமான 26 மாகாணமட்ட பாடசாலைகள் காணப்படுகின்றன. சுமார் 3073 மாணவர்களுக்கு 340 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். இங்கு மண்டைதீவு கதிரேசு வித்தியாலயம், மண்கும்பான் G.T.M முஸ்லீம் பாடசாலை, வேலணை ஆத்திசூடி வித்தியாலயம், புங்குடுதீவு சிறி சண்முகானந்தா வித்தியாலயம், புங்குடுதீவு அரிய நாயகம் புலம் A.M.T.M பாடசாலை, இறுப்பிட்டி A.M.T.M பாடசாலை, குறிகட்டுவான் G.T.M பாடசாலை, புங்குடுதீவு பராசக்தி வித்தியாலயம் ஆகியன இயங்கு நிலையில் இல்லை. ஆயினும் ஏனைய பாடசாலைகள் சிறந்த முறையில் தமது கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்கின்றன.

இவ்வாறு தீவகம் வடக்கு வேலணைப்பிரதேசமானது யாழ்நகரிலிருந்து சிறிது தள்ளி இருந்தாலும் தற்காலங்களில் ஒப்பீட்டளவில் நல்ல முன்னேற்றமடைந்து வருகின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும். சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டுக்காரணிகள் மனிதவளக்காரணிகள் சுற்றுலாதளங்களின் அபிவிருத்திகள் கிராமமட்ட அமைப்புக்களின் தொடர் செயற்ப்பாடுகள் உட்கட்டமைப்பு வசதிவாய்ப்புக்கள் ஆகியன தீவகத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளில் துணைபுரிகின்றன. இனம், மதம், மொழி, சமூக வேறுபாடுகளின்றி அனைவருக்கும் அனைத்து வசதிவாய்ப்புக்களும் கிடைக்கப் பெறுகின்றன. அமைவிடம் அகலாங்கு நெட்டாங்கு மொத்த நிலப்பரப்பு சனத்தொகை இன, மத, மொழி, வயது அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கல்வி தரைத்தோற்றம் மண்கட்டமைப்பு விவசாயம் கைத்தொழில் மீன்பிடி பொருளாதார அபிவிருத்திகளும் இக்கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உசாத்துணைகள்


1. ச.மாணிக்கவாசகர் வேலணை ஓர் வரலாற்று அறிமுகம் . வேலணை வரலாற்றில் வெளியீட்டு சபை -2006

2. புள்ளிவிபரக் கைநூல் பிரதேச செயலகம். தீவகம் தெற்கு. வேலணை -2022

3. மூலவளத்திரட்டு . பிரதேச செயலகம் தீவகம் தெற்கு. வேலணை -2022

4. கலாநிதி. STB. இராஜேஸ்வரன். யாழ்பாணக் குடாநாட்டினதும் அதன் அயலில் அமைந்துள்ள தீவுகளினதும் தோற்றம். பக்கம் 1-33 புவியியல் துறை யாழப்பாண

# வாசிப்பின் முக்கியத்துவம்

**வாசிப்பு என்றால் என்ன?**

வாசித்தல் அல்லது படித்தல் என்பது எழுதப்பட்ட உரையின் எழுத்துக்களை பார்த்து, சொற்களைப் புரிந்து, அதில் கூறப்பட்ட கருத்தை உணர்ந்து கொள்வது எனலாம். வாசித்தல் எழுத்தறிவின் ஒரு அடிப்படைக் கூறு. இன்றைய அன்றாட வாழ்க்கைக்கு வாசித்தல் அவசியமானது. வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துவதோடு சிறந்த அறிவுத்திறனையும், நுண்ணறிவினையும் வழங்குகின்றது.

பரந்துபட்ட உலக அறிவினைப் பெற்றுக் கொள்ளவும், புதிய புதிய தகவல்களை அறிந்து கொள்ளவும் இந்த வாசிப்பு எமக்கு உதவுவதாகவே காணப்படுகின்றது. எனவே மனித வாழ்வில் வாசிப்பு இன்றியமையாததாகும்

**வாசிப்பின் நன்மைகள்**

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தற்கு கற்றனைத்தூறும் அறிவு" என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய நாம் எந்தளவிற்கு அறிவார்ந்த நூல்களை ஆழமாகக் கற்கின்றோமோ அந்தளவிற்கு எம்மால் முழுமையான அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வாசிப்புப் பழக்கமானது வெறுமனே நூலறிவை மட்டும் வழங்குவதில்லை. மாறாக சிந்தித்து செயற்படும் ஆற்றலையும், முழுமையான நிதானத்தையும் வழங்குகின்றது. இதனையே "வாசிப்பினால் மனிதன் பூரணமடைகின்றான்" என்று குறிப்பிடுவர். வாசிப்பானது ஒரு மனிதனை முழுமையானவன் ஆக்குகின்றது

வாசிப்பு என்பது மனிதனுக்கு சிறந்த ஒரு பொழுதுபோக்கையும் மன அழுத்தத்துக்கான அமைதி தன்மையயும் வழங்குகின்றது. அத்துடன் பல்வேறு புதிய விடயங்களையும், வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்களையும் கற்றுக் கொள்வதற்கு வாசிப்பு உதவுவதோடு, பல்வேறு தலைவர்களின் உருவாக்கத்திற்கு காரணியாகவும் இந்த வாசிப்பு அமைந்துள்ளது.

**வாசிப்பினால் உயர்ந்தவர்கள்**

வாசிப்பின் மூலம் சிந்தித்தல், ஆராய்தல், காரணம் கண்டறிதல், கற்பனை செய்தல் முதலிய திறன்கள் வளருகின்றன. ஒரு மனிதன் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் பொழுதை திருப்திகரமாகப் போக்குவதற்கும் வாசிப்பு துணை நிற்கின்றது. மகிழ்ச்சியாக உள்ளவனே சுயமாக சிந்திக்கும், ஆராயும், கருத்துக்களை வெளியிடும் நிலையில் எப்போதும் தன்னை வைத்திருப்பான். அவனே சமூகத்தின் பார்வைக்குட்பட்டவனாக மாறுகின்றான். வாசிப்பு மனிதனை மேன்மை அடையச் செய்கின்றது இந்த வாசிப்பினால் உயர்ந்தவர்கள் உலகில் பலர் உள்ளனர்.

அந்த வகையில் வறுமைமிக்க குடும்பத்தில் பிறந்தும் புத்தக வாசிப்பினால் உலகைப் பற்றி அறிந்து அமெரிக்காவின் தலைசிறந்த தலைவராக திகழ்ந்தார் ஆபிரகாம் லிங்கன்.

மரணித்த பின்னரும் ஒரு மனிதனுடன் உறவாடவும் தர்க்கிக்கவும் அவனை ஆய்வு செய்யவும் முடியுமான சந்தர்ப்பத்தை வழங்குவது வாசிப்பேயாகும். ‘‘பழங்கால புருஷர்களை நேரில் சந்திக்க வேண்டுமானால், அவர்களோடு உரையாட வேண்டுமானால் நூலகங்களுக்குப் போ’’ என்கிறார் மாஓசேதுங்.

‘‘புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் நூலகங்களே’’ என்கிறார் லெனின். வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தகங்களை வாசிக்க அனுமதியுங்கள்’ என்றார் நெல்சன் மண்டேலா.

வாசிப்பு போன்று ஓர் இயல்பான விடயம் எதுவும் இல்லை. வாசிப்பு பழக்கம் என்பது நமது சிந்தனையை மாற்றும் திறன் கொண்டது. அனைவரும் புத்தகங்களை வாசிக்க வேண்டும். புத்தகங்கள் ஒரு வாழ்க்கை அனுபவம். புத்தகங்கள் அறிவு சார்ந்தவை. புத்தகங்கள் ஒரு சமூகம். புத்தகங்கள் இல்லையென்றால் மனிதர்களுக்கு தற்போது இருக்கும் பண்புகள் இருந்திருக்காது. மனித இனத்தின் மிகச் சிறந்த கண்டுப்பிடிப்புகளில் ஒன்று படிப்பறிவு.

நம் பரிணாம வளர்ச்சி எனும் கடிகாரத்தில் உருவானது வாசிப்புப் பழக்கம். எத்தனை மது பாத்திரங்கள் அல்லது கால்நடைகள் நம்மிடம் உள்ளன என்பதை குறித்ததில் தொடங்கியது இந்த வாசிப்பு. எழுத்துக்கள் தோன்றியதால் அறிவை சேமிக்கவும், நினைவில் வைத்து கொள்ளவும் உருவான ஒரு சிறந்த முறை வாசிப்பாகும்.

மனித மூளை வடிவமைப்பின் முக்கிய அமைப்பை மாற்றும் சக்தி கொண்டது வாசிப்பு. இது பார்வைத் திறன், மொழித் திறன், சிந்தனைத் திறன், உணர்வுத் திறன் ஆகியவற்றுக்குள் ஒரு புதிய தொடர்பை ஏற்படுத்த உதவுகின்றது. ஒவ்வொரு புதிய வாசிப்பாளருக்கும் உண்மையில் புத்துணர்ச்சியை தருகின்றது. ஒரு நல்ல கதையை வாசிப்பது என்பது பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை விட அதிக நன்மைகள் அளிக்கக்கூடியது. வாசிப்பு பழக்கத்திற்கு பல மருத்துவ ரீதியான நன்மைகள் உள்ளன. வாழ்வில் ஏற்படும் நோய்களுக்கு தீர்வாக புனைவுகளை பரிந்துரைக்கும் கலையே நூலியல் மருத்துவம் எனும் பிப்லியோதெரபி. படைப்பாற்றல், அறிவாற்றல், கருணை ஆகிய மூன்று அற்புதமான திறன்களையும் வாசிப்பு வழங்குகின்றது.

**வாசிப்புத் திறனை விருத்தி செய்யும் வழிகள்**

இன்று நம்மிடையே குறைந்து வரும் பழக்க வழக்கங்களில் ஒன்றாக வாசிப்பு காணப்படுகின்றது. வாசிப்புப் பழக்கத்தை வாழ்வோடு தொடர்புடைய அம்சமாக பார்க்கப்படவேண்டும். வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்துக் கொள்வதில் ஒருவரின் மனநிலை பிரதான பங்கு வகிக்கின்றது. வாழ்வோடு ஒன்றிணைந்த செயற்பாடாக வாசிப்பினை மாற்றிக்கொள்ள வேண்டும்.

வாசிப்புத் திறன் என்பது மாணவர்களின் அறிவியல், மொழியியல் மற்றும் சிந்தனைக் கண்ணோட்டத்தை விருத்தி செய்யும் முக்கியமான திறனாகும். இதனை மேம்படுத்துவதற்கான பல வழிமுறைகள் உள்ளன, அவற்றில் சில முக்கியமானவற்றை இங்கு ஆராய்வோம்.

1. வாசிப்பதற்காக ஒரு இலக்கை தீர்மானித்தல் - ஒரு நாளைக்கு ஒரு பக்கமோ அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு புத்தகமோ என்று ஒரு இலக்கை நிர்ணயித்து வாசிக்க ஆரம்பிக்க வேண்டும். அமைதியான சூழலை தேர்ந்தெடுத்து தினமும் வாசிப்பதற்கு என நேரத்தை ஒதுக்குவது அவசியம்.

2. தினசரி வாசிப்புப் பழக்கம் - வாசிப்பு ஒரு பழக்கமாக மாற வேண்டியது முக்கியம். தினசரி குறைந்தது 15-30 நிமிடங்கள் சிறிய கதைகள், கட்டுரைகள் அல்லது மனதுக்குப் பிடித்த புத்தகங்களை வாசிப்பதன் மூலம் வாசிப்பு ஆர்வத்தை வளர்த்துக்கொள்ளலாம். இது நேரத்தைக் குறைத்துக் கொள்ளாமல், புத்தகத்தை நண்பராகக் கொண்டாட உதவும்.

3. புத்தகக் கிளப்புகள் அல்லது வாசிப்பு குழுக்களில் சேருதல் - குழுக்களாக வாசிப்பது படிப்பாளிகளின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள ஏற்ற வழியாக அமையும். புத்தகக் கிளப்புகளில் புதிய புத்தகங்கள் அறிமுகம் செய்யப்படுவதுடன், அவரவர் மனதில் எழும் கேள்விகளையும் விவாதிக்கலாம். இதன் மூலம் கருத்து பரிமாற்றம் பெருகி வாசிப்புப் பசியை அதிகரிக்கும்.

4. ஆறுதலாக வாசித்தல் - வாசிப்பின் போது, வாக்கியங்களின் பொருளை மனதில் நிறுத்தி ஆறுதலாக வாசிப்பது மனம் மற்றும் மூளைக்கு பலனளிக்கும். இதனால் எழுத்தின் அழகை உணர்ந்து, அதன் உள்வெளியில் மூழ்க முடியும். இதைச் செய்வதால் நினைவாற்றலும் கருத்துத்திறனும் மேம்படும்.

5. புதிய சொற்களைக் கண்டறிதல் - புதிய சொற்கள் வாசிப்பில் எதிர்மறையாகத் தோன்றினாலும், அவற்றின் பொருள் கண்டறிந்து மனதில் பதிப்பது மாணவர்களின் மொழி அறிவைக் கூர்மையாக்கும். இதற்காக சொல் அகராதி அல்லது மின்னணு அகராதிகளைப் பயன்படுத்தலாம்.

6. விரிவான கேள்விகள் எழுப்புதல் - வாசிக்கும் உள்ளடக்கத்தின் மீது கேள்விகள் எழுப்புவது ஒரு ஆழமான புரிதலை ஏற்படுத்தும். இது சிந்தனையைத் தூண்டும் மற்றும் வாசிப்பின் மூலம் புதியதொரு கோணத்தில் பார்க்க உதவும். மேலும், ஒவ்வொரு பதிவையும் சரியான விளக்கத்தோடு புரிந்துகொள்வது கட்டாயமாகும்.

7. புத்தகங்களின் வகைகளை மாற்றுதல் - ஒரே வகைப் புத்தகங்களில் மட்டும் அல்லாமல், அறிவியல், வரலாறு, புனைவு, நகைச்சுவை போன்ற பல்வேறு வகைகளில் புத்தகங்களை வாசிப்பது அறிவியல் அறிமுகம் மற்றும் பன்முகப்பாடங்களை அறியத் துணைபுரியும். இது மனதை விரிவாக்கி, பலவகை மொழிசொற்களை அறியச் செய்வதுடன் புத்துணர்வையும் வழங்கும்.

8. வாசிப்பின் பயன்களைப் பகிர்ந்துகொள்ளுதல் - மற்றவர்களிடம் வாசித்த புத்தகத்தின் முக்கிய அம்சங்களைப் பகிர்ந்து கொள்ளும் போது, அந்த தகவல்கள் நினைவில் நன்கு பதிந்துவிடும். மேலும் இது வாசிப்பின் மீது ஆர்வத்தை ஊக்குவிக்கும். இதனால் நண்பர்களோடு அல்லது குடும்பத்தினருடன் வாசிப்பில் கிடைத்த அறிவைப் பகிர்ந்து கொள்ளலாம்.

வாசிப்புத் திறன் என்பது ஒரே நாளில் மேம்படும் திறனல்ல இது ஒரு கட்டமைக்கப்பட்ட முயற்சியாகவும் விடாமுயற்சியாகவும் இருக்க வேண்டும்.

மேற்கண்ட வழிமுறைகளைப் பயன்படுத்தி, மனம் விரும்பும் புத்தகங்களை ஆர்வத்துடன் வாசிப்பதன் மூலம் வாசிப்பு திறனை வளர்த்துக் கொள்ளலாம்.

முக்கியமாக புத்தகங்களை வாசிப்பதன் மூலம் எமது வாழ்க்கையானது வெற்றிப் பக்கங்களை நோக்கி பயணிக்கும் என்பதனை நினைவிற் கொள்வதுடன் சிறு வயதிலிருந்தே வாசிப்புப் பழக்கங்களை வளர்க்க வேண்டும்.

**முடிவுரை**

வாழ்க்கையென்பது இடர்கள் நிறைந்தது. அதை நோக்கியப் பாதை தெளிவாகவுள்ள போதுதான் வாழ்க்கை சிறப்பாகும். பிரகாசமான வாழ்க்கையை ஏற்படுத்துவதில் நூல்கள் மீதான வாசிப்பு பெரும் பங்காற்றி வருகின்றது. வாசிப்பு நம் முன்னோர்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்திருக்கின்றது. அதனால் தான் அவர்களால் அதிக நூல்களை அடுத்த தலைமுறைக்காக விட்டுச் செல்ல முடிந்தது.

புத்தக வாசிப்பானது மனிதனை நல்வழிப்படுத்தும் சிறந்த ஆயுதமாகும். நல்ல நூல்களை சிறந்த நண்பர்கள் என குறிப்பிடுவர். மனிதரிற்கு நல்ல வழிகாட்டியாகவும், அறிவினை அள்ளித் தரும் ஆசானாகவும் விளங்கும் வாசிப்புப் பழக்கத்தை எமது அன்றாட கடமைகளில் ஒன்றாக மாற்றியமைப்பது எமக்கு நன்மை பயக்கும்.

தொழில்நுட்ப சாதனங்களின் மீதுள்ள மோகம் இளைய சமுதாயத்தில் வாசிப்புப் பழக்கத்தை அரிதாக்கி வருகின்றது. எனவே சமூக வலைத்தளங்களின் பாவனையைக் குறைத்து நூல்களை நம் உற்ற நண்பர்களாக மாற்றி சிறந்து விளங்குவோமாக.

**இராசேந்திரன் சசீகரன்**
**பதவிநிலை உத்தியோகத்தர் (நூலக சேவைகள்)**
**நூலகம்**
**வவுனியாப் பல்கலைக்கழகம்**

# இன்றைய காலத்தின் தேவைப்பாடுகளில் சனசமூக நிலையத்தின் அவசியத்தன்மை

**முன்னுரை**

கூட்டமாய் வாழ்ந்த மனித குலம் தனித்தனியாய் வாழத்தொடங்கிய நவீன காலத்தின் வளர்ச்சி இருப்புக்களை எல்லாம் கேள்விக்குறியாக்கி விட்டது. கூட்டமாய் கூடி தெளிவான விவாதங்களுக்காயும், சரியான முடிவுகளை எடுப்பதற்காகவும் பொதுவான இடத்தில் ஒன்றுகூடிய மக்கள் மிகச்சரியான ஜனநாயக கூட்டமாக மிளிர்ந்ததோடு, பல தெளிவு மிக்க முடிவுகளை அன்றைய கூடல்களில் பெற்றுக்கொண்டார்கள். இவ்வாறான முடிவுகள் இன்றும் வரலாறாய் மிளிர்வதை காணக்கூடியதாகவே உள்ளது.

சமூகமாய் வாழத்தொடங்கிய மக்கள் தம் சமூகத்தில் உருவான பிறழ்வுகளுக்கு விடை காணவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள். அவர்களின் தீர்வுகள் சமூகத்தின் முன்னேற்றத்துக்கும் ஏதுவாய் அமைய வேண்டிய தேவை ஏற்பட்டது. அத்தோடு சமூகத்தில் வாழ்ந்த பல்வேறுபட்ட சமூதாயத்தவர்களையும் ஒருங்கிணைக்க வேண்டிய தேவையும், சமூகத்தின் மையமாக திகழ வேண்டிய ஓர் அமைப்பின் தேவையும் அவர்களின் ஒருங்கிணைவில் தேவையானதாகவும் காணப்பட்டது. இவ்வாறான தேவை ஈடேற்றத்துக்காக ஏற்படுத்தப்பட்டதே சனசமூக நிலையங்கள் ஆகும்.

**தலைப்பிற்கான விளக்கம்**

ஒரு கிராமத்தின் வளர்ச்சி என்பது அதை அண்டி வாழும் மக்களின் வளர்ச்சியுடன், நாட்டின் வளர்ச்சியையும் சேர்த்தே தீர்மானிக்கிறது. மக்கள் அடையும் நிறைவான மகிழ்ச்சி என்பது சார்ந்து வாழும் நாட்டின் வளர்ச்சியையும் வலுப்படுத்துகிறது. குழும

ஒற்றுமையையும், சிக்கல்களுக்கான தீர்வுகளையும் நோக்காக கொண்டு கிராம, நகர மட்டங்களில் பல சனசமூக நிலையங்களின் தோற்றப்பாடுகள் நிகழ்ந்து இருந்தன. 1980மற்றும் 1990ம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சிகளும், செயற்பாடுகளும் மிக பலம் பொருந்தியதாக காணப்பட்டன. மக்களின் பொழுது போக்குகள், பாதிக்கப்பட்ட உரிமைகளின் வெளிப்பாட்டு குரல்கள், ஆற்றல் திறமைகளின் வெளிப்படுத்தும் களமாகவும், சமூக பொருளாதார சிக்கல்களின் தீர்விடமாகவும் சனசமூக நிலையங்களே அக்காலப்பகுதியில் மிளிர்ந்துள்ளதை புலப்படும் உண்மையாய் அவதானிக்க முடிகிறது.

சனசமூக நிலையங்கள் நூல்நிலையங்களாகவும், பத்திரிகை வாசிப்பிடங்களாகவும் இருந்தே வந்தன. அத்தோடு கடன்திட்டங்களை வழங்கும் கிராமிய வங்கிகளாகவும், கலை நிகழ்வுகளை நடாத்தும் ஒற்றுமை கூடங்களாகவும் திகழ்ந்தே இருந்தது. மேலும் முதியவர்களின் கதை பகிரும் மற்றும் இளைப்பாறும் இடங்களாகவும், செய்திகளின் பகிர்வின் தளங்களாகவும், அரசியல் சமூக விவாத மன்றங்களாகவும், திகழ்ந்தே இருந்தன. தொலைக்காட்சிகள் சில வீடுகளில் மட்டுமே காணப்பட்ட காலப்பகுதிகளில் மக்களின் பொழுதுபோக்கு கூடங்களாக சுற்றியுள்ளவர்களுக்கு அமைந்தே இருந்தது. இளைஞர்களின் சல்லாப மாளிகைகளாகவும், சிறுவர்களின் பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு களங்களாகவும், காணப்பட்டே இருந்தது, இதனால் சமூகத்தில் பல பிறழ்வு நிலைகள் அங்கு உருவாகாமலே இருந்தது அத்தோடு தவறுகள் இடம்பெற்ற போது தட்டிக்கேட்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டு சீர்செய்யும் இடங்களாக திகழ்ந்தமையால் பிழையான விடயங்கள் உருவாகாமலே இருந்தன. சனசமூக நிலையங்கள் ஆலயங்களை அண்டி அமைக்கப்பட்டு இருந்தமையால் ஆன்மீக வளர்ச்சியும் விளைந்திருந்தமையால் தவறுகள் இல்லாமலே காணப்பட்டது. குறிப்பாய் கூறப்போனால் தமிழர்களின் ஆயுதப் போராட்ட பிரச்சார களங்களாக சனசமூக நிலையங்களே திகழ்ந்தன எனலாம்.

**இன்றைய கால சனசமூக நிலையங்கள்**

இன்றைய காலத்தில் பல சனசமூக நிலையங்கள் தொழிற்படு தன்மைக்கு அப்பால் சென்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. நிலையங்களுக்கு செல்பவர்களின் எண்ணிக்கையின் குறைவு அதன் இயங்கு நிலைக்கு சவாலாய் உருவாகியே

உள்ளது. இன்றைய கால தொழில்நுட்ப வளர்ச்சியானது மக்கள் தங்களின் தனிப்பட்ட செயற்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் நிலையை உருவாக்கி உள்ளது. சமூக செயற்பாடுகளுக்கு முகம் கொடுத்தால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலை என்பதின் அடிப்படையில் ஒதுங்கிக்கொள்ளும் நிலை காணப்படவே செய்கிறது. கூட்டொருங்கியமாக இயங்கிய சமுதாயம் கண்ட பல வெற்றிகள் இன்றைய கால நினைவுகளில் மட்டுமே தங்கி விட்டது. கலைகளால் தம்மை அடையாளப்படுத்திய சமூகங்கள், பேசுபொருளாய் இருந்த கலை நிகழ்வுகள் என அனைத்தும் குறைந்துபோய் வெறும் தொலைக்காட்சி நாடகங்களுக்குள்ளும், தொலைபேசி வீடியோக்களும், அடிதடி திரைப்படங்களுக்குள்ளும் தொலைக்கப்பட்டே விட்டன எனலாம். முதியோரின் பொழுதுபோக்குகள் குறைவடைந்தமையால் முதியோர் இல்லங்களின் அதிகரிப்பும், குறைவயது இறப்புக்களும் அதிகரித்தே விட்டன.

தானும் தன்குடும்பம் என்கின்ற நிலைப்பாட்டின் உருவாக்கம் வெறும் சனசமூக நிலைய கட்டிடங்களையே மிஞ்ச வைத்துள்ளது எனலாம். அத்தோடு வீட்டுக்குள்ளேயே முடங்கிப்போய் வெளியுலக அனுபவங்களை தொலைக்கும் மாணவ சமூகத்தையும் உருவாக்கியே உள்ளது. மன அழுத்தங்களின் அதிகரிப்பால் தற்கொலைகளும், அதிகரிக்கும் போதைப்பொருள் பாவனை என்று சிறுவர் சமூகத்தின் எச்சங்களாய் மிஞ்சப்போகிறது.

**சனசமூக நிலையங்களை இயங்கு நிலையில் உருவாக்க சில பரிந்துரைகள்.**

- செயற்படவும், செயற்படுத்தவும் கூடிய நிர்வாக கட்டமைப்பை உருவாக்கல்.
- பங்குபற்றுபவர்களையும், அதிகம் பயன்படுத்துபவர்களையும் பொது அரங்குகளில் கௌரவப்படுத்தல்.
- கலாச்சார நிகழ்சிகளை மாதம் ஒருமுறை ஒழுங்குபடுத்தல்.
- வறுமை மாணவர்களை கல்வியில் வளர்ச்சியடைய வைக்க இலவச வகுப்புகள்.
- இலவச மருத்துவ முகாம்களை ஏற்படுத்தல்
- தினசரி பத்திரிகைகளை நிலையத்தில் காட்சிப்படுத்தல்.
- இளைஞர் சமூகத்தை உருவாக்கி சில பொறுப்புக்களை ஒப்படைத்தல்.
- நிதிக் கட்டமைப்பை பலப்படுத்தல், நிதி நிர்வாகத்தை சரிவர வெளிப்படுத்தல்.

- கட்சி சார்பு அரசியலை வெளிப்படுத்தாது, அரசியல் உரையாடல் களத்தை உருவாக்கல்.
- மாதம் ஒரு ஒன்றுகூடலை ஏற்படுத்தி கலை நிகழ்வை நடாத்துதல்.
- விளையாட்டு திடல்களை அமைத்தல்(கரப்பந்தாட்டம்,)
- இலவச கணனிப் பயன்பாட்டு கூடங்களை அமைத்தல்.
- புலம் பெயர் உதவிகளை சரிவரப்பெற்று நல் பயன்பாட்டை உறுதிப்படுத்தல்
- அங்கத்தவராய் இணைவதற்கான இறுக்கங்களை இளகச்செய்தல்.
- பெண்கள் அமைப்புக்களையும் உருவாக்கி, சிறு தொழில் முயற்சிகளை உருவாக்கல்.(தளபாட வாடகை, பனைபொருள் உற்பத்தி)
- மாதர் அமைப்புகளுக்கூடாக சிறுகடன் திட்டங்கள்
- சரிவர இயங்கும் நிர்வாக அமைப்பை நிகழ்வுகளில் வெளிப்படுத்தல்.
- சுற்றுலா நிகழ்சிகளை ஏற்படுத்தல்.

இவ்வாறான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதன் வாயிலாக தளர் நிலையில் காணப்படும் சனசமூக நிலையங்களை இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு முயற்சிக்கலாம். இந்த முயற்சிகள் சரிவர செயற்படுத்தப்பட்டால் நல் மக்கள் சமூகத்தை உருவாக்க முடியும். அவசர உலகமும் தொலைத்தொடர்பு பாவனையும், போதைப்பொருட்களின் அதிகரிப்பும் போன்ற தீமைத்தனத்தில் இருந்து சமூகத்தை கட்டமைப்பு மிக்கதாய் ஆக்குவதற்கு சனசமூக நிலையங்களின் மீள் உருவாக்கம் அவசியமானதே.

**முடிவுரை**

முன்னைய காலங்களில் சனசமூக நிலையங்களே சமூகத்தின் அச்சாணியாகவும், ஒருங்கிணைக்கும் மையங்களாகவும், புத்திஜீவிகளை உருவாக்கும் கூடங்களாகவும், கலைகளை வெளிப்படுத்தும் கலாசாலைகளாகவும் திகழ்ந்தே இருந்தன. ஆனால் இன்றைய நவீன வளர்ச்சி சவாலை ஏற்படுத்தி நிற்கிறது. அவசரம் மிக்கதான வாழ்கை முறை ஆபத்தானது என்பதை நாம் இப்போது உணர ஆரம்பித்து விட்டோம். இவை அனைத்தின் மாற்றங்கள் இன்றைய காலத்தின் தேவையே. மனிதநேயமிக்க சமூகத்தின் உருவாக்கத்துக்கும், போதைப்பொருள் அடிமைத்தனத்தில் இருந்து

விடுதலையாகவும், அதிகரித்துள்ள மற்றும் தேவையற்ற சமூக ஊடகங்களின் பாவனையில் இருந்து விடுபடவும் சனசமூக நிலையங்களின் தேவைப்பாடு மிக அவசியமானது ஒன்றாகும். இதன் உருவாக்கத்தின் மூலமே நல்லதொரு கிராம அமைப்பு முறையை உருவாக்கிக்கொள்ள முடியும்.

**திருமதி. கௌசிகா தர்சன்**
**நூலக பரிசாரகர்**
**வேலணை பொது நூலகம்**

# 21ம் நூற்றாண்டில் டிஜிட்டல் நூலகத்தின் பயன்பாடு

டிஜிட்டல் நூலகம் என்பது “ஆன்லைன் நூலகம், இணைய நூலகம், டிஜிட்டல் களஞ்சியம், டிஜிட்டல் சேகரிப்பு என வகைப்படுத்தப்படுகின்றது.

ஒரு தசாப்தத்திற்கு மேலாக நூலகங்கள் தங்களைத் தாங்களே புதுப்பித்துக் கொண்டிருக்கின்றன. ஸ்மார்ட் போன்களின் தோற்றம் மற்றும் திறந்த இணைப்பானது தகவல் அணுகலை கிட்டத்தட்ட அனைவரின் கைகளிலும் தவழ்கின்றது. அவை வெறும் தகவல் களஞ்சியமாக இல்லாமல் பல்வேறு வகையான தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்கமாக கொண்ட முழு சமூக மையங்களாக நூலகங்கள் உருமாறியுள்ளன.

டிஜிட்டல் நூலகம் என்பது புத்தகங்கள், பத்திரிகைகள், ஆடியோ பதிவுகள், வீடியோ பதிவுகள் மற்றும் மின்னணு முறையில் அணுகக்கூடிய பிற ஆவணங்கள் போன்ற டிஜிட்டல் பொருட்களின் தொகுப்பாகும்.

டிஜிட்டல் நூலகங்கள் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதற்கு பயனாளர்களுக்கு பரந்த அளவிலான ஆதாரங்களுக்கான ஆன்லைன் அணுகலை வழங்குகின்றன. அவை பெரும்பாலும் மாணவர்களால் ஆராய்ச்சிக்காக அல்லது தங்கள் துறையில் சமீபத்திய முன்னேற்றங்களில் தொடர்ந்து இருக்க விரும்பும் நிபுணர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

டிஜிட்டல் நூலகங்களை பின்வரும் இடங்களில் மக்கள் அணுக முடியும். பொது நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் பெறமுடியும். மென்பொருள்களில் பெரும்பாலானவை Open Source அல்லது பயன்படுத்த இலவசம் ஆனது ஆகும். அமெரிக்காவின் டிஜிட்டல் பொது நூலகம் திறந்த நூலகம், இணையக் காப்பகம் மற்றும் திட்டம் குட்டன் கெர்க் ஆகியவை எடுத்துக்காட்டுகளாகும்.

டிஜிட்டல் நூலகத்தை பயன்படுத்துவதன் நன்மைகள் என்னும் போது தகவல்களை பெறுவதற்கான அணுகல் அதிகரித்த வசதி, பயனாளர்கள் இணைய இணைப்பு மூலம் எங்கிருந்தும் நூலகத்தை அணுகுவது இலகு, சக்தி வாய்ந்த தேடல் மற்றும் இயற்பியல் நூலகங்களின் விடைக்கான மல்டிமீடியா உள்ளடக்கம் ஆகியவை அடங்கும்.

டிஜிட்டல் நூலகங்களில் பயனர்களை ஈர்க்கக்கூடிய அனுபவத்தையும் மற்ற பயனர்கள் இணைவதற்கும், புதிய வழிகளில் தலைப்புக்களை ஆராய்வதற்கும் சமூக ஊடகங்கள் போன்ற அம்சங்களை வழங்குகின்றன.

டிஜிட்டல் நூலகங்கள் பயன்படுத்துவதால் பல்துறை மாணவர்கள், தொழில் வல்லுனர்கள் மற்றும் அறிவு அல்லது பொழுது போக்கை தேடும் எவருக்கும் விலைமதிப்பற்ற வளங்களை உருவாக்குகிறது.

CAD நூலகம் என்பது கணினி உதவி வடிவமைப்பு நூலகம் அல்லது CAD நூலகம் என்பது 3D மாதிரிகள் அல்லது கணனி உதவி வடிவமைப்பு, கணனி உதவி பொறியியல் CAR, கணனி உதவி உற்பத்தி CAM அல்லது கட்டிடத் தகவல் மாடலிங் (BIM) ஆகியவற்றின் கிளவுட் அடிப்படையிலான களஞ்சியமாகும்.

CAD நூலகங்களில் எடுத்துக்காட்டுகள் Grab CAD, Sketchup 3D Warehouse, Sketchfab, Mc Master-carr, Turbosquid, Chaos Cosmos மற்றும் திங்கிவர்ஸ் மாடல்கள் இலவசம் மற்றும் Open Source அல்லது தனியுரிமமாக இருக்கலாம். மற்றும் CAD லைப்ரரி 3D மாடல்களுக்கான அணுகலைப் பெற சந்தா செலுத்தவேண்டும். A: CAD நூலகங்கள் வரைபடங்களின் இணைக்கப்பட்ட திறந்த தரவுகளை பயன்படுத்தி உருவாக்கப்படுகின்றன.

பாரம்பரிய நூலகங்கள் சேமிப்பு இடத்தினை டிஜிட்டல் நூலகங்களின் தகவல்களை சேமித்து வைக்கும் ஆற்றல் அதிகம். டிஜிட்டல் நூலகத்தை பராமரிப்பதற்கான செலவு பாரம்பரிய நூலகத்தை விட மிகக் குறைவாக இருக்கும், பாரம்பரிய நூலகம் பணியாளர்கள், புத்தக பராமரிப்பு, வாடகை மற்றும் கூடுதல் புத்தகங்களுக்காக பெரும் தொகையை செலவிட வேண்டும். டிஜிட்டல் நூலகங்கள் குறைக்கலாம் அல்லது சில சமயங்களில் இந்தக் கட்டணங்களை நீக்கலாம்.

டிஜிட்டல் நூலகங்களினை பயன்படுத்துபபர் உடல் ரீதியாக நூலகத்திற்குச் செல்ல வேண்டியதில்லை இணைய இணைப்பு இருக்கும் வரை உலகம் முழுவதிலுமுள்ள

மக்கள் ஒரே தகவலை அணுக முடியும். 24 மணி நேரமும் டிஜிட்டல் நூலகங்களை பயன்படுத்தலில் நூல்களின் பண்பு, படங்களின் தரம், கறை, நிறமாற்றம் போன்ற குறைபாடுகளை நீக்கலாம்.

டிஜிட்டல் நூலகங்களின் குறைபாடுகள் சேகரிப்புகளுக்கான அணுகலுக்கான பயனாளர் அங்கீகாரம், காப்புரிமை, பாதுகாப்பு, இடைமுகவடிவமைப்பு கணனிகள் மற்றும் மென்பொருளுக்கு இடையே இயங்கக்கூடிய தன்மை, தகவல் அமைப்பு, திறனற்ற அல்லது இல்லாத வகை பிரித்தல் நடைமுறைகள், பயிற்சி மற்றும் மேம்பாடு, மெட்டா டேட்டாவின் சேமிப்பு, சேவையங்கள் மற்றும் பணிநீக்கங்களை உருவாக்க மற்றும் பராமரிப்பதற்கான அதிகப்படியான செலவு.

எதிர்காலத்தில் டிஜிட்டல் நூலகத்தின் வளர்ச்சியாக கூகிள், மில்லியன் புத்தகத்திட்டம் மற்றும் இணையக்காப்பகம் ஆகியவற்றில் பெரிய அளவிலான டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்கள் நடந்து வருகின்றன. புத்தகக் கையாளுதல் மற்றும் விளக்கக்காட்சி தொழில்நுட்பங்கள் போன்றனவாகும். வணிக ரீதியான மேம்பாடுகளினால் டிஜிட்டல் நூலகங்கள் வேகமாக பிரபலமடைந்து வருகின்றன.

**திருமதி. ஜெயந்தினி ரஞ்சன்**
**ஆசிரியர்**
**யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்**

# ஆசிரியத்துவத்தில் வாசிப்பின் முக்கியத்துவம்

''வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான்'' என்ற கூற்றிற்கு இணங்க நாம் அனைவரும் சிறுவயது முதல் அறிவுக்குப் பொருத்தமான நல்ல நூல்களை தேடிப்பெற்று வாசித்தல் என்பது அவசியமானதொன்றாகும். வாசிப்பு பழக்கத்தை மாணவ சமுதாயத்திடம் இருந்து வளர்க்க வேண்டிய பாரிய பொறுப்பானது ஒவ்வொரு ஆசிரியர்களிடமும் காணப்படும் பாரிய பொறுப்பு ஆகும். மாணவப் பருவத்தில் ஆசிரியர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களுக்கு நல்ல முறையில் வாசிப்பு பழக்கத்தை உருவாக்குவதோடு அவர்களின் தேடல் அறிவிற்கும் வித்திடவும் செய்தல் வேண்டும். வகுப்பறை, பாடசாலை நூலகம், பொது நூலகங்கள் போன்ற இடங்களில் மாணவர்களை அழைத்துச் சென்று சிறுவயது முதலே வாசிப்பினை அவர்களுக்கு ஊட்டச்செய்தல் அவசியமானதாகும். ஒழுக்கமுள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவர்களை நல்ல விழுமியங்களை வாசிப்பின் ஊடாக அழைத்துச்சென்று நற் பாதையினை கரம்பற்றி பயணம் செய்ய வைத்தல் வேண்டும்.

அறிவை பெருக்கி, அறியாமை என்னும் இருளினை அகலச்செய்து, தெளிவினை ஊட்டச்செய்து இனிமையான வாழ்வினை பெறுவதற்கு அடித்தளமானதாக அமைவது கல்வி ஆகும். ஏட்டறிவு கல்வி என்பது வாசிப்பினால் ஏற்படுத்தப்பட்டாலும் கல்வியும் வாசிப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஆகும். சிந்திக்கும் திறன் மிகுந்த மனிதன் மொழிப் பயன்பாட்டினாலும், கருவி கையாட்சியினாலுமே முன்னேறத் தொடங்கினான். தனது வாழ்வியல் அனுபவங்களை தனக்கு பின்வருகின்ற சமுதாயத்திற்கு வழங்க எண்ணிய அவன் எழுத்து முறையை கையாள ஆரம்பித்தான். மொழியை கையாண்ட அவனுக்கு எழுத்து முறையை கண்டறிந்தது பெரும் வெற்றியாக காணப்பட்டது. எழுத்து முறைக்கான உபகரண தேடல் அவனின் அறிவுக்

கூர்மைக்கு சவாலாகவும் பெரும் வெற்றியாகவும் காணப்பட்டது. இதனால் தான் இன்றைய அறிவியலுக்கு அடித்தளமான ஓலைச்சுவடிகளும் ஏடுகளும், புல் எழுத்துக்களும், களிமண் தட்டுக்களுமென தோற்றம் பெற்றிருந்தன எனலாம். இதன் படிமுறை வளர்ச்சியாகவே இன்றைய நூல்களின் உருவாக்கங்கள் இடம்பெறுகின்றன. இதனால் பல மனித சமூதாயத்தின் அறிவுப்பெருக்கம் இடம்பெற தொடங்கியிருந்தது. மேல்நிலையோரின் அறிவு மறைப்புக்களும், புத்தக கிடங்குகளில் மறைக்கப்பட்ட அறிவுத் தகவல்களும் நூல்களாக வெளிப்பட தொடங்கிய போதே அறிவின் பெருக்கமும் இடம்பெற்றிருந்தது.

வாசிப்பறிவு இல்லாத மனிதன் அரை மனிதன் என்கிற ஒரு நிலைப்பாடானது சமுதாய கொள்கையியலில் சில காலம் ஆக்கிரமிப்பினை கொண்டிருந்தது. வாசிப்பு பலரின் அன்றாட பொழுது போக்காகவும், அறிவியல் தேடலின் அச்சாணியாகவும், கல்வி கற்பித்தல் முறையின் பிரதான மையப் புள்ளியாகவும் செயற்பட்டு இருந்தது. இந்த வாசிப்பின் பழக்கம் ஆனது ஒரு தனி மனித அறிவுபெருக்கத்துக்கும், ஆக்கத்திறனின் விருத்திக்கும், கற்கும் மற்றும் கற்பிக்கும் திறனுக்கும், ஒழுக்கம் மிகு வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியே நிற்கிறது. கல்வி சார் தன்னிறைவை பெற்றுக்கொள்வதற்கு வகுப்பறையிலே இருந்து வாசிப்பு பழக்கம் உருவாக்கப்படல் வேண்டும் என்பது இன்றைய காலகட்டத்தின் பெருக்க நிலைக்கு அவசியமாகிறது, பிள்ளைகளின் கல்வி முறையில் பெரிதும் பங்காற்றும் ஆசிரியத்துவம் இன்றைய மாணவர்களின் அறிவு பெருக்கத்துக்கு முன் தம்மை இன்னும் அதிகமான தயார்ப்படுத்தலை மேற்கொள்ள வேண்டிய நிலை வளர்ந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. கருவறையில் இருந்தே வாசிப்பின் தேவை அதிகரித்துள்ள நிலையில் வகுப்பறை கல்வி முறைக்கு எவ்வாறானதொரு அவசியத்துவத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதனை உணர முடிகிறது.

வாசிப்பு தேடல் உள்ள ஒரு ஆசிரியரால் மட்டுமே வாசிப்பு திறன் மிகு மாணவர்களையும் உருவாக்கமுடியும் அத்தோடு அறிவார்ந்த மாணவர் சமுதாயத்தையும், ஒழுக்கமிகு மாணவ சமுதாயத்தையும், நல்ல மேதைகளையும், பல்துறை சார் வித்தகர்களையும் உருவாக்க முடியும். இவ்வாறான உருவாக்குதலின் வாயிலாகவேதான் தன்னிறைவு சார் சமுதாயத்தை உருவாக்கவும் வளர்க்கவும் முடியும். மாறிவரும் சமுதாய மாற்றங்களுடன் அத்தியாவசிய தேவைப்பாடுகள் மாற்றங்களை பெற்றுவரும் நிலையில் அதில் பிரதானமாய் விளங்கும்

கல்வித்தேவைப்பாடும் மாற்றங்களோடு பயணித்தல் என்பது மிகவும் அவசியமாகும். அத்தோடு மாணவர்களின் அறிவுத் தேவைப்பாட்டுக்கு தீனி போட ஆசிரியத்துவம் தேடி கற்க வேண்டிய நிலைப்பாடு வலுப்பெற்றுள்ளது எனலாம். அறிவினை மட்டுமே விதைகின்றதோடு ஆசிரியப்பணி முழுமை அடைவதில்லை அவர்களின் ஆன்மீக வளரச்சியிலும் ஆசிரியர்களின் பங்கும் இன்றியமையாதது ஆகும். இந்த வளர்சிக்கு ஆன்மீக நூல்களை மாணவ சமுதாயத்திற்கு அறிமுகப் படுத்த வேண்டிய நிலையும் காணப்படவே செய்கிறது. இவ்வாறான ஆன்மீக அறிவை கற்பிப்பதற்கு முதல் ஆசிரியர்கள் அதுதொடர்பான நூல்களை தேடி வாசித்தல் என்பதும் அசியமானது ஒன்றாகும்.

வெறுமனே பெற்றுக்கொண்ட அறிவை மட்டுமே இன்றைய கால கல்வி முறைமைக்கு போதுமானது அல்ல. ஒவ்வொரு ஆசிரியர்களும் தாம் தமது கல்வி கற்பிக்கும் முறைக்கு பெரியதொரு தேடலை மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு இன்றைய கல்வி முறையில் பெரியதொரு சவாலாக காணப்படவே செய்கிறது. அத்தோடு மாணவ சமுதாயம் கல்வி முறைக்கு அப்பால் இலத்திறனியல் தேடலுக்கு அப்பால் தாம் பெற்றுக்கொள்ளும் அறிவோடு கல்வி செயற்பாடுகளில் கவனம் செலுத்துவதால் அவர்களின் மேலதிக கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டிய நிலைப்பாடு இன்றைய கல்வியியல் நடவடிக்கையில் அதிகரித்தே காணப்படுகிறது. இவ்வாறான நிலைப்பாடுகளுக்கு ஒவ்வொரு ஆசிரியனும் தனது அறிவியல் தேடலுக்கு நூல்களை நாட வேண்டிய தோற்றப்பாடு உருவாகியே உள்ளது. எனவே ஒவ்வொரு ஆசிரியர்களும் தமது ஆற்றல் மிகுந்த கல்வி முறைக்காக நூல்களை வாசித்தறிவது என்பது மிகவும் அவசியமானது ஒன்றாகும். வெறுமனே வாய்மொழி கல்விமுறைக்கு அப்பால் தேடல் மிகு கல்வியையும் மாணவர்களுக்கு வழங்கி மாணவ சமூதாயத்தையும் நூலகத்தை நோக்கி அழைத்து செல்பவர்களாக விளங்குவோம். அத்தோடு கொடுக்கப்படும் ஆக்கத்திறன் செயற்பாடுகளில் புத்தகங்களின் உட்செலுத்தலின் முக்கியத்துவத்தை உணர்த்துவோம். நாளைய சமுதாயம் வாசிப்பினால் வளம்பெறுவதற்கு நாமும் காரணங்களாய் மிளிர்வோம்.

தினமும் வாசிப்பதனால் எம்மில் நல்ல குணங்களின் பெருக்கங்களும் நிகழ்கின்றன. தன்னம்பிக்கையுடன் தளராது முன்னேற கரம்பற்றும் வழிகாட்டியாக புத்தகங்கள் திகழ்ந்தே நிற்கின்றன. இதுவே நாளைய சமுதாயத்தின் தீபங்களாக மிளிரவும் போகின்றன. வாசிப்பு விரயமாக்கப்படும் நேரங்களாக கொள்ளாமல்

விதைகளாக்கப்படும் படிமுறையாக கொள்ளுவோம். சிறுவயதுடன் கருக்க பல தீய சக்திகளின் வருகை என்பது அன்றாடமாகியுள்ள சூழ்நிலையில் நாளைய சமுதாய இருத்தலுக்கு இன்றே நல்ல மாணவர்ளை உருவாக்கும் நற்பணியான ஆசிரிய பணியை நல்ல ஆயுதமாகக் கொள்வோம். அந்த பணியில் வாசிப்பை எமது வாழ்வாக்குவோம், மாணவர்களையும் அதற்கு பழக்கப்படுத்துவோம். வாசிப்பு பழக்கத்தை விரும்பி செய்வோம். வழமான வாழ்வினை உருவாக்குவோம்.

**திருமதி. கிருபா நிதி சந்திரராஜா.**
**(B.A, PGDE)**
**ஆசிரியர்**
**புனித பெனடிற் றோமன் கத்தோலிக்க பாடசாலை**

# கற்றலின் உன்னதமான கருவி வாசிப்பு

"வீட்டுக்கு வெளிச்சம் சாரளத்தின் ஊடே"
அறிவுக்கு வெளிச்சம் வாசிக்கும் நூலே"

கருவறையில் இருந்து கல்லறை வரைக்கும் தொடர்வது எதுவென்றால் கற்றல் மட்டுமே என்பர் கல்வியியலாளர்கள். அத்தகைய கற்றல் பயணத்தில் வாசிப்பே முதன்மை பெறுகிறது. வாழும் காலமெல்லாம் வாசித்துக் கொண்டு வாழ்வை வளமாக்கும் நுட்பங்களை அறிந்து தெரிந்து வாழ்தலே வாழ்க்கை என்பர். வலிமையும் வளர்ச்சியும் கொண்டு விரியும் கல்வி தருகின்ற பரீட்சை சான்றிதழ்களும் பட்டங்களும் வாசிப்பை எல்லையிட்டு விடுகின்றது. பாடசாலைகளில் நடத்தப்படும் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் மேலான கற்றல் கற்பித்தல் கருவியாக ஒரு உன்னத கற்றலை துரிதமாக்கும் சாதனமாக வாசிப்பு திகழ்கிறது.

கல்வி என்பது வாழ்க்கையின் உயிர்நாடி அதைப் பெறுவது மண்ணில் பிறந்த மாந்தர் அனைவருக்கும் கிடைத்த உரிமையாகும். கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக இயந்திரமானதாக பெறுபேறுகளையும் பட்டங்களையும் குறிக்கோளாக கொண்டதாக அமைதல் கூடாது. சமநிலை ஆளுமை கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதையும், ஒவ்வொரு தனி நபரிடமும் நல்ல விழுமிய வாழ்க்கையோடு இணைந்த பண்புகளை வளர்ப்பதையும் மையமாகக் கொண்ட கல்வியை தேடிக்கற்ற வேண்டும். வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வாழ வைப்பதற்கும் கல்வி உதவ வேண்டும். இப்படிப்பட்ட சிறந்த கல்வியை மாணவர்கள் அடைவதற்கு வாசிப்பு பெரும் பங்காற்றுகிறது.

பாடப் புத்தகங்களை மட்டும் கற்றும் மாணவர்கள் புத்தகப் பூச்சிகள் என்றே கற்றோரால் அழைக்கப்படுகின்றனர். இவர்களிடம் அடுத்தவரைப் பற்றி,

சமுதாயத்தைப்பற்றி, உலகத்தைப்பற்றிய சிந்தனைகள் இல்லாதிருப்பதையே காணக்கூடியதாக உள்ளது. பாடப் புத்தகங்கள் பாட அறிவை மட்டுமே வளர்க்கும். ஆனால் பரந்துபட்ட கல்விப்பயன்பாடும் தெளிந்த சிந்தனையும் சமுதாய ஒருங்கமைவும் நேர்த்தியான அறிவை உள்ளவரை உள்ளபடி அறிய மாணவர்களுக்கு வாசிப்பு மட்டுமே பயன்படுகிறது. உயர்கல்வி மேம்பாட்டுக்கு பொது அறிவு, பொது உளச்சார்பு, தர்க்கம், நுண்ணறிவு போன்றன இன்றியமையாதவையாக உள்ளது. இவை யாவும் வாசிப்பு மூலமே பெற முடிகிறது.

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு”

என்றார் திருவள்ளுவர். தொடர்ந்து வாசிப்பதனாலேயே அறிவு மேம்படும் வாசிப்பின் அளவிற்கேற்பவே எமது உயர்வும் அமையும் என்று அன்றே கூறினார் வள்ளுவப் பெருந்தகை.

“வாசிப்பு ஒருவனைப் பூரணமாக்கும்” என்பர். இன்றைய கணிணி உலகில் வாசிப்பின் பயன்களை புரியாத சூழலில் நாட்டமற்று ஓர் இயந்திர வாழ்க்கையையே நாம் வடிவமைத்துக் கொண்டுள்ளோம்.

ஒவ்வொரு நாளும் புதிதுபுதிதான திட்டமிடலின்றி ஒரே வகையான சிந்தனையோடு செயலாற்றி வருகின்றோம். இவை எமது வாழ்வின் அர்த்தங்களையும் மகிழ்ச்சியையும் குறைத்து விடுகின்றன. ஆனால் நாம் வாசிப்பை எமதாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு புத்தகம் ஒரு பாடசாலைக்கு சமனாகும். அறிவூட்டும் ஆசிரியருக்கு அதனை ஒப்பிடலாம். விரிவுரைகள், பட்டிமன்றங்கள், விவாத அரங்கு, சொற்பொழிவுகள் போன்றவற்றில் கலந்துகொள்வது கேட்பவர்களுக்கு பயனுடையதாக இருந்தாலும் நல்ல புத்தகங்கள் மேலும் விபரமாக விளக்கங்களை அளிக்கிறது. “பசுமரத்தாணி போல மனதில் பதிய வைக்க புத்தகங்கள் துணை புரிகின்றன” என சாமுவேல் ஜோன்சன் என்ற ஆங்கில அறிஞர் தெளிவாகக் கூறியுள்ளார். நாம் புத்தகங்களை வெறுமனே வாசிக்காது நல்ல புத்தகங்களை தேர்ந்தெடுத்து விருப்பமுடன் வாசித்தால் அறிவை, மனபலத்தை, மன அமைதியை இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

“கண்டது கற்கப் பண்டிதனாவான்” என்பது தவறான கூற்றாகும். தேவையானவற்றை குப்பைகளை எல்லாம் வாசித்தால் எவரும் பண்டிதனாக முடியாது. நல்லவற்றைக் கற்பதனாலேயே பண்டிதனாக முடியும். வாழ்வின் அடிப்படைக்கு எது நல்லதோ அதை தெரிந்து கற்பதனாலேயே ஒருவன் நல்ல அறிஞனாக முடியும். நல்லவற்றைக் கற்க வேண்டும். கற்றதன்படி ஒழுகுதல் வேண்டும். அல்லாவிடின் “பிடித்தது பிள்ளையார் வந்தது குரங்கு” என்ற நிலை ஏற்படும் பாலோடு நீரைக் கலந்து வைத்தால் பாலை மட்டுமே அருந்துமாம் அன்னப் பறவை. அதுபோல எதை வாசித்தாலும் நல்லவற்றையே தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும். நல்ல சிந்தனைக்கு, சிறந்த கல்விக்கு, நல்ல சமுதாயம் அமைய வாசிப்பு முக்கியம். அதனால்தான் வாசிப்பு மனிதனை பூரணமாக்குகிறது என்று கூறியுள்ளனர் பெரியோர்.

வாசிப்பை விலக்கிவிட்டு வாழ்தல் என்பது உயிரற்ற வாழ்வாகவே அமைகிறது. எமது முன்னோரும் அறிஞர்களும் இலக்கியத்தில் தமது அனுபவத்தில் கற்றுத் தெளிந்த சிந்தனையால் அறிவின் சிறப்பால் எழுதி வைத்து இன்றும் போற்றப்படும் பல பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் பரந்து விரிந்து கிடக்கிறது. இவை வாசிப்புக்கும் தர்மம் வாழவும் எம்மை தூண்டுகிறது. வாசிப்பை விரும்பும் வகையில் பல கலை நூல்களையும் கருத்தூன்றி சிந்தனை விரிய வாசித்தல், இரசித்து வாசித்தல், உரத்து வாசித்தல் என்பனவும் பண்டைய இலக்கியச் செல்வங்களான ஐம்பெருங்காப்பியங்கள், திருக்குறள், கம்பராமாயணம், மகாபாரதம், பாரதி பாடல்கள் போன்ற அழியாத கருத்துரைக்கும் நூல்களின் மொழி வளத்தை புரிந்து வாசித்தல் என்பனவும் வாசிப்புக்கு ரசனை சேர்ப்பனவாக அமைகின்றன. இத்தகைய நூல்களை வாசிப்பதன் மூலம் எமது வாழ்வின் வழிகளை புரிந்து தெளிவாக நடக்கவும் எம்மை மனிதனாக வாழ்விப்பதற்கு பெரிதும் உதவுகிறது.

ஆகவே நல்ல நூல்களைத் தேடி வாசிக்க முன்வருவோம். எமது மொழி வளம் பெருகவும், மொழிக்களஞ்சிய விருத்தி அதிகரிக்கவும் வாசிப்பை நாடுவோம். வாசிப்பை தமது கற்றல் ஆயுதமாக கொள்பவர் புதிய படைப்புக்களை உருவாக்கும் சிறந்த ஆக்க இலக்கிய படைப்பாளியாக மாறுகிறார்கள். சிறந்த நூல்கள்,

பத்திரிகைகளை வாசிக்கும் மாணவர்கள் கல்வியில் மேம்பாடடைவர். நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லவர்களாக மாறுவார். நல்ல நூல்களை தேடிக்கற்போர் தமக்கு மட்டுமன்றி பிறருக்கும் வழிகாட்டிகளாக மாறுவர். ‘‘நூல் வாழ்வின் படிக்கல்’’ என்பதை ஒவ்வொரு மாணவர்களும் உணர்ந்து வாசித்தல் வேண்டும்.

**‘‘வாசிப்பை நேசிப்போம்**

**வாசகராக மாறுவோம்**

**வாசிப்பின் மூலம் புது உலகம் காண்போம்’’**

**திருமதி.மேரி பிரான்சிஸ்கா சாள்ஸ்**
**(B.A.Dip in Edu,M.A)**
**பெரியபுலம் மகா வித்தியாலயம்.**

# கிறிஸ்தவ கல்வித்துறையில் வாசிப்பின் முக்கியத்துவம்

கிறிஸ்தவ கல்வி என்பது மனிதரின் உள்ளார்ந்த நற்குணங்களை வளர்க்கும், ஆன்மீக வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஒரு சீரிய வழிமுறையாகும். இதில் வாசிப்பு இன்றியமையாத அங்கமாகக் கருதப்படுகிறது. வாசிப்பின் மூலம் மனிதர் புதிய அறிவை மட்டுமன்றி தத்தம் வாழ்க்கையை ஆழமாகப் புரிந்துகொள்ளவும், ஆழ்ந்த அனுபவங்களைப் பெற்றிடவும் வழிகாட்டப்படுகிறார்கள். வாசிப்பின் வல்லமை உலகியல் மற்றும் ஆன்மீக ரீதியான தர்மங்களை உணர்த்தி, முழுமையான மனிதராக வளர்வதற்கான பரந்த வழியையும் வழங்குகிறது.

“வாசிக்கிறவன் இறப்பதற்கு முன் ஆயிரம் வாழ்க்கை வாழ்கிறான்” என்கிறார் ஜோர்ஜ் ஆர். ஆர். மார்ட்டின். இராஸ்மஸ் கூறும் “என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கும்போது நான் புத்தகங்களை வாங்குவேன், மீதமிருந்தால் உணவும் உடுதுணியும் வாங்குவேன்” என்ற வரி கூட வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. ஆகவே வாசிப்பு என்பது வெறும் அறிவுக் கூடுதல் மட்டுமல்ல. மாறாக அது மனிதனின் அனுபவம் மற்றும் உலகப் பார்வையைப் பெருக்குகிறது என்பது இங்கு புலப்படுகின்றது. வாசிப்பு அறிவு வளத்தை மட்டும் சேர்க்காமல், மனதின் உளவியல் மற்றும் வாழ்வின் சுகபோகங்களை உணர்வதற்கும் வழிகாட்டுகிறது.

தூய பவுல் தன்னுடைய முப்பது வருட திருச்சபைப் பணியில் இருந்தபோதும் கூட புத்தகங்களை தொடர்ந்து தேடிக்கொண்டிருந்தார் (2 தீமோ 4:13). இது வாசிப்பின் மூலம் அவர் ஆன்மீக அறிவிலும், தத்துவ உணர்விலும் இன்றியமையாத வளர்ச்சியை அடைந்ததைத் தெளிவுபடுத்துகிறது. வாசிப்பு ஒருவருக்குள் ஆர்வத்தைத் தூண்டி, சிந்தனையை வலுப்படுத்துகிறது. மனிதனை பூரணப்படுத்துகின்றது. ஆனால் கிறிஸ்தவர்கள் வாசிப்போடு மட்டும் நின்று விட முடியாது. மாறாக வாசிப்பின் மூலம் பெற்ற அறிவை பகிர்ந்து கொள்ளுதல் கிறிஸ்தவ கல்வியின் முக்கியப்பணியாகவும், சமூகச் செல்வாக்கை அமைப்பதாகவும் கருதப்படுகிறது.

இன்றைய சமூகத்தில் முகநூல், வட்ஸ்அப் போன்ற இணையதளங்கள் தகவல் பகிர்விற்கு முன்னிலை வகிப்பினும், அவற்றால் வாசிப்பின் மூலம் ஒருவருக்கு கிடைக்கும் ஆழமான அனுபவத்தை அளிக்க முடியாது. வாசிப்பின் மெய்யான சுவையை உணர வேண்டும் என்றால், சற்று நேரம் ஒதுக்க வேண்டியது மிகவும் அவசியம். குறிப்பாக வேதாகமம் போன்ற ஆன்மீக நூல்களை மேலோட்டமாக அன்றி ஆழமாகப் படிக்கும்போது தான் அவற்றின் மூலம் புதிய வாழ்க்கை அனுபவங்களைப் பெறும் வாய்ப்பினை நாம் பெற முடியும். வாசிப்பு மனக்கிளர்ச்சியையும் அறிவின் வளர்ச்சியையும் ஏற்படுத்தும், மனதின் மேன்மைக்கு வழிகாட்டும் சிறப்பான அனுபவமாகும்.

வாசிப்பு இல்லாமல் வாழ்க்கையில் உயர்ந்தவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை என்பதும் உண்மையே. வாசிப்பு மனிதனின் அறிவு, சிந்தனை, விவேகம், ஒழுக்கம் ஆகியவற்றின் மேன்மைக்கான அடிப்படை ஆகும். நல்ல வாசிப்பு நன்மக்களையும், நல்ல சமூக மாற்றத்தையும் உருவாக்கும் திறனுடையது. மொழியின் வளம் வளரத் தொடங்கும் போது அறிவும் அனுபவமும் பயனுறும். வாசிப்பு மூலம் மொழியின் அழகிய மாற்றங்களை நாம் உணர்வதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

கிறிஸ்தவ கல்வியின் அடிப்படைக் கல்லாக விளங்கும் வாசிப்பு கிறிஸ்தவ கல்வியின் முன்னேற்றத்திற்கும், ஆன்மீகத்தின் வலுவூட்டுதலுக்கும் முக்கியத்துவம் என்பது மறுக்கமுடியாத உண்மை. இது சிந்தனையையும் ஆன்மாவையும் செழுமையாக்கும் அற்புத சக்தியுடையதாகும். வாசிப்பு முற்றிலும் ஒவ்வொரு நபரின் வாழ்வையும் உயர்த்தும் இறைவனின் கருவியாக விளங்குகிறது.

**அருட்சகோதரன்.V.J.ஜேசுதாஸ்**
**புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக்கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

# வெற்றியின் தடங்களில் பதிந்திருக்கும் வாசிப்பு

## (மத்திய பிரிவு போட்டியில் முதலிடம் பிடித்த கட்டுரை)

"வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்தும்" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க வாசிப்பானது ஒவ்வொரு மனிதனையும் ஓர் முழு மனிதனாக மாற்றும் வல்லமை உடையது என்பதனை நாம் அறிவோம். அதாவது ஓர் மனிதனானவன் வாசிப்பின் வாயிலாக தமது அறிவையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்கிறான். ஒரு மனிதனின் வாழ்வில் வாசிப்பானது ஓர் முக்கிய இடத்தை வகிக்கிறது. அதாவது அறிவுத் திறனை வளர்த்து வெற்றிக்கு வழிகாட்டி நிற்பவை வாசிப்பே ஆகும். ஆகவே வாசிப்புதான் மனிதனின் வெற்றித் தடங்களில் பதிந்துள்ள உண்மையாகும்.

வாசிப்பின் வாயிலாக ஒருவன் தன் வாழ்க்கையில் பற்பல நன்மைகளை அடைந்துள்ளான். வாசிப்பே ஒருவருக்குள் ஒளிந்திருக்கும் அவரது திறமைகளை வெளிக்கொண்டுவரும் சாவிகளாக தொழில்படுகின்றன. வாசிப்பின் வாயிலாக பற்பல அறிவியலாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் போன்ற பலர் உருவாக்கப் பட்டுள்ளனர். சிறு பராயம் தொட்டே ஒருவர் வாசிப்பை ஓர் பழக்கமாக வைத்திருந்தால் அவரின் அறிவிற்கும் அவரது திறமைக்கும் அது சிறந்த வித்தாக அமைந்திருக்கும். அவ்வித்தானது மரமாகும் பருவத்தில் அவர் பெரும் வெற்றிகளையும், சாதனைகளையும் படைப்பதற்கும் சிறந்து விழங்கவும் வாசிப்பு காரணமாய் அமையும்.

உதாரணமாகக் கூறினால் நாம் அனைவரும் சேர்.தோமஸ் அல்வா எடிசனை அறிவோம் அவர் தான் நம் அனைவரின் வாழ்விலும் ஒளியினை கொணர்ந்தவர் ஆவார். அதாவது மின்குமிழை கண்டுபிடித்தவர். நாம் அவரது வாழ்க்கை வரலாற்றை பார்ப்போம் ஆனால் அவர் தனது சிறு பராயத்தில் முட்டாள் எனவும், ஆசிரியர் கற்பிப்பதை விளங்கிக்கொள்ள முடியாதவர் என கூறப்பட்டு பாடசாலையில் இருந்து விலத்தப்பட்டவர். அவர் தனது பாடசாலை காலத்தை அவரது தாயாருடன்

நூலகங்களில் உள்ள நூல்களை வாசிப்பது, தேடிக்கற்பதிலும் தனது காலத்தை கழித்தார். அவரது புத்தக அறிவு அவரது திறமைகளை வெளிக்கொண்டுவர பெரும் உதவியாக இருந்தது. அதாவது முட்டாளென அழைத்த தோமஸ் அல்வா எடிசனை கண்டுபிடிப்பாளராக உலகம் அறியவும், சாதனை படைக்கவும் வைத்தது புத்தக வாசிப்பே என்று கூறுவது மிகையாகாது.

இந்த காலகட்டத்தில் ஒவ்வொரு கிராமங்களிலும் நூல் நியைங்கள் நிறைவாக இருந்தும் கூட அதனை பயன்படுத்துவோரது எண்ணிக்கையானது மிகக் குறைவாகும். நூல்களது மகிமையையும், நூலகங்களது முக்கியத்துவத்தினையும் அனைவரும் மறந்து விட்டனர் என்பதே உண்மை. சிறுவர்களில் இருந்து பெரியவர்கள் வரை இணைய வழிப் போக்கில் மூழ்கிக் கிடப்பதே இதற்கான முக்கிய காரணம் எனலாம். இதன் வாயிலாக மனிதர்களது மூளைவளம் குறைவடைந்து செல்கிறது. பல நபர்களின் வெற்றிக்கு இவ் அலட்சியத் தன்மையே பிரதான காரணம் என கூற முடியும். இக்காலத்தில் பாடசாலைகளிலும் நூலகங்களினதும், நூல்களினதும் முக்கியத்துவம் பற்றி பேசப்படுவதே இல்லை என்பதும் வாசிப்பின் குறைவின் காரணமாய் அமைகிறது.

இப்போது ஏதாவது தகவல் தேவைப்படும் போது இணையத்தின் வாயிலாக நிறைவேற்றவே முயல்கிறோம். ஆனால் அந்த தேவைகளை அவன் நூல்களின் வாயிலாக தேடிப்பெறுவானாயின் அது அவனது பூரண அறிவிற்கு வித்திடுவதோடு, தேடும் விடயம் சார் பரந்து பட்ட அறிவினையும் அவனால் பெற்றுக்கொள்ள முடியும். இக்கால கட்டத்தில் இவ்வாறான இணையப்பாவனையானது பலரது அறிவார்ந்த சிந்தனைகளும், சிந்தனையாளர்களும் வீட்டின் தேடலோடே முடக்கப்படுகிறார்கள். இணையவழி தேடலின் காலப்பகுதிக்கு முன்னர் பல கவிஞ்ஞர்களும், கட்டுரையாளர்களும், ஆய்வாளர்களும் அதிகமாகவே சமூகத்தில் காணப்பட்டார்கள். அவர்களின் திறமைகள் மக்கள் பலரால் வாசிப்பால் அறியப்பட்டே இருந்தது. அதனால் வெளியீட்டாளர்களின் வெளியீடுகளும் அவர்களின் முயற்சிகளும் பெரிதும் வெளிவந்து மக்கள் மத்தியில் வாசிப்பால் அவர்களை அடைந்தும் இருந்தது.

வரலாற்று காலங்களை எடுத்து நோக்குவோமானால் மறுமலர்ச்சி காலங்களில் பல நூலாசிரியர்களின் தோற்றப்பாடும், அவர்களின் அதிக வெளியீடுகளும் தோற்றம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. அவ்வாறு தோன்றிய பல புத்தகங்கள் பல புரட்சிகளையும் தோற்றுவித்தும் இருக்கின்றன. குறிப்பாக நோக்குவோமானால்

அரசியல் புரட்சிகள், விஞ்ஞானப் புரட்சிகள், சமூகப் புரட்சிகள் என்பவற்றை குறிப்பிட முடியும். நாடுகளும் அதன் வளர்சிகளை காண புரரட்சிகளின் காரணத்தை குறிப்பிட்டாலும், புரட்சிகளுக்கு வித்திட்ட அறிவு விருத்தியையும், புத்தக வெளிவருதலையும், வாசிப்பு பழக்கத்தையுமே குறிப்பிட முடியும்.

இப்போது நமது நாட்டில் பல குற்றவாளிகளும், தீவிரவாதிகளும் எழுந்து விட்டனர் என்பது நாம் காணும் விடயமே. இதற்கு சமுதாய வெறுப்புக்களும், கல்வி இடைவிலகல்களும், வழிநடத்த துணையின்மை, அதீத போதைப்பழக்கம் போன்றவற்றை குறிப்பிட்டாலும், முறைப்படியாய் கிடைக்காத கல்வியே பிரதான காரணமாகும். இவ்வாறான குற்றச்செயல்களை மாற்றும் சக்தியானது புத்தகங்களுக்கு உண்டு என்பது இதன் மூலம் அறியும் உண்மையே. ‘‘ஒரு நூலக சாலை திறக்கப்பட்டால் ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படும்’’ என்னும் வாயிலாக உணரவும் முடிகிறது. இறுதியாக புத்தக வாசிப்பானது எமது திறமைகளை இனங்கண்டு அதை தாமே வெளிக்கொணர்ந்து வெற்றியாளராக தடம் பதிக்க எமக்கு உதவும் என்ற உண்மையை நாம் அனைவரும் அறிய வேண்டும். ஆகவே புத்தக வாசிப்பின் நன்மைகளை உணர்ந்து வெற்றியாளர்களாய் மிளிர்வோம்

**நூல் வாசிப்போம்**
**புலன் பெறுவோம்..**

**ப. சாம்பவி.**
**தரம் - 11**
**யா/வேலணை மத்திய கல்லூரி**

# செவியின்பத்தில் மூழ்கிய யாழ்ப்பாணம் இன்று புவியின்பத்தில் ஊறியதோ?

இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர் யாழ்ப்பாணம் பாருக்குள்ளே நல்ல நாடாக, பேருக்கும் ஊருக்கும் யாருக்கும் ஏருக்கும் நேர்வழிகாட்டி தேராக மிளிர்ந்தது எனலாம்.

1948 இற்கு முன்னர் பண்டித வாண்மையிலும், பண்டிதத் தமிழிலும் எண்டிசையும் கோலோச்சிய யாழ்ப்பாணம் 1975 காலப்பகுதிவரையும் செவி வழிமூலமாகப் புகுந்து நிரம்பிய கலை இன்பம், வாசிப்பு, நேசிப்பு, பேரீப்பு, யாசிப்பு, சுவாசிப்பு, தரிசிப்பு, பிரகாசிப்பு, என இந்தமண்ணிலே நிலையின்பமாக விளங்கிற்று அக்காலகட்டமானது காணுதல், கேட்டறிதல், பேணுதல், மீட்டுதல், விமர்சித்தல், பகிரங்கப்படுத்துதல், ஊடகமயமாகுதல் என ஒரு சாதாரண செய்தி பல்பரிமாணங்களாகக் கிராமத்திலும் நகரத்திலும் பகிரப்பட்டன. அன்றைய பொழுதுக்கும் அடக்கமான நாகரீகத்திற்கும் அமைதியான வாழ்வுக்கும் அதீத உழைப்பிற்கும் செவி வழிவரும் செய்தி போதும் என பிரம்மாதமாக விளங்கிற்று. இத்தகு செயற்பாட்டிலே வானொலி, நாளிதழ்கள், இருபரிமாண, முப்பரிமாண சமயோசிதக் காட்சிகள், ஒலிபரப்புகள், ஆலய வெளிப்பாடுகள், முக்கியமாகப் புராணப்படிப்புகள், உபந்நியாசங்கள், முத்தமிழ் அரங்குகள், சனசமூகநிலையங்களின் கலந்துரையாடல்கள், அங்கீகரிக்கப்பட்ட சபைகளின் திட்டமிட்ட போட்டிகள், சமூக அங்கீகாரம் பெற்ற தூயகர மேதாவிகளின் உடை நடை பாவனைகளின் தடையில்லா விடைகளும் விமர்சனங்களும், பாடசாலைச் செயற்பாடுகள், சமூக உடல் மொழி, சமய பாடல் மொழி இவை யாவும் செவிவாயிலான வாசிப்புத் தொனிப் பொருளை உள்வாங்க சமூகம் இடமளித்தது. தனிமனித வாழ்வும் இடமளித்தது.

இரவு, பகல், கனவு, நினைவு, கடமை, வழமை, வீடு, வளவு, வீதி, பயணம், காணி, துண்டு, காடு, கரம்பை, கோயில், குளம் இவ்வாறு செவி வழி ஒலியின்பம் வரிவடிவமாகப் பரிணமித்து மண்ணுக்கு வரம் சேர்த்தது. இதன் பெறுபேறுதான் பாடசாலைகளில் ஆரம்ப இடைநிலை வகுப்புக்களில் வாய்விட்டுச் சொல்லும்

மனனமும், வாய் உரத்துச் சொல்லி மகிழ வைக்கும் வாசிப்பும், கல்வியைக் கசடற கற்கவும் பிழையற வாசிக்கவும் பரீட்சையில் பிழையற எழுதவும், சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக். கொள்ளவும் வாசிப்புத்தான் மூலதனமாயிற்று வாசிப்பே சுவாசமாயிற்று. சுவாசிப்பாயிற்று.

சமூக சுகமும் ஆயிற்று. சந்தானமகிமையுமாயிற்று. 1975 இற்குப் பின்னர் பையப்பையவே இத்தகு சுவாத்தியத்தினைச் சகல கல்வி உடையார்களும் சோடை போக விட்டமையினால் இலங்கை முழுவதுமாக, மொழியின் தரம் பாடத்திட்ட பரீட்சைகளுக்காக வாழ்கிறதேயன்றி, பாவிப்புக்கும் படைப்புக்குமாக இன்னும் உயரவில்லை. க.பொ.த.சாதாரண பரீட்சையில் குறிப்பாக 13309 மாணவர்கள் 9A சிறந்த பெறுபேறு பெறுவதற்கும், பல்கலைக்கழகத் தெரிவுகளுக்கான அடைவுமட்டத்தினைத் தேவைப்படுத்தியதற்கும் ஆதாரம் வாசிப்பின் மகத்துவமே.

இது ஒரு புறமிருக்க, கடினமே உருவான கடந்த உயர்தரப் பரீட்சையிலே 27000 மாணவர்கள் எல்லாப்பாடங்களிலும் சித்திபெறவில்லை. ஏன் இந்தமாணவர்க்கு, இந்த அவல நிலை என்று, எந்தக் குருவியாவது கவலைப்பட்டார்களா? அல்லது இவர்களுக்கென்று ஒரு அவசர அவசிய சுகவர செயற்றிட்டத்தினைக் கல்விப்புலம் சார்ந்த கலாநிதிகள், மேதாவிகள், முன்மாதிரிகள், மூலவர்கள், முதன்மையானவர்கள், மேடைக்குருவிகள், மதம் சார்ந்தவர்கள், மனம் சார்ந்தவர்கள், மணம் சார்ந்தவர்கள் இரங்கி, இறங்கி, அரசுக்கு அழுத்தம் கொடுத்து, ஒன்பது மாகாணங்களிலும் இவர்களுக்கான எளிதான பாடங்கள் மற்றும் எளிதான வழிகாட்டல்கள் மூலம் ஒரு வருட அதீதபயிற்சியளிப்பதான, மூன்று பாடங்கள் கூடவே ஆங்கிலம் உட்பட பொது அறிவுடன் சித்தி பெறுவதற்கும், வெளிவாரியாகப் பல்கலையில் படிக்கவல்ல ஒரு சமூகத்தினை உருவாக்கவும், ஏன் பொறுப்பான அரசும் சிந்திக்க அவசரப்படாதது குறித்து, காலம் கவனம் செலுத்தி மிகுந்த வேதனையடைந்துள்ளது.

ஆமாம்! 13 வருடங்கள் பாடசாலையிலே இடை விலகாமல், எட்டுப்பாடங்களும் படித்த, இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் தோல்வி பெறாத, வறுமை என்ற குடும்ப அனர்த்தத்தில் சிக்குண்ட மாணவர்களே இந்த 27000 தொகையுடைய பெருந்தொகையினராவார். அடேயப்பா இவர்களை 2010இல் இருந்து எவருமே பொறுப்பாளிகளாக விடைகூற முயலவும் முடியவில்லை! இயலவும் முடியவில்லை! இது இவ்வாறு இருக்கும் பட்சத்தில் பாடசாலையும், பெற்றோரும், நிர்வாகிகளும்,

நாமுமே இவர்களுக்குப் பொறுப்பாளிகளாவர். இதிலிருந்து எவருமே தப்பிவிடமுடியாது. ஆமாம் தப்புவதற்காக எத்தனை அபிசேக ஆராதனை அருச்சனை அன்னதானம் செய்தாலும் உரிய கடுழயித் தண்டனை அனுபவித்தேயாக வேண்டும். எவராவது அழுது கேட்டு தண்டனைை ஒத்திவைத்தாலும் அவரவர் குடும்பம் விடுபட்ட தண்டனையை அனுபவித்தேயாக வேண்டும்.

3A எடுப்பவர்களையும், எடுத்தவர்களையும், 9A எடுப்பவர்களையும், எடுத்தவர்களையும் கவனிப்பதற்கு அப்பால், முப்பது புள்ளிகளுக்குக் கீழ் மீளமுடியாத முட்டுப்புள்ளிகளைப் பெற்றுவரும் பரிகார மாணவர்களுக்கு பாடசாலையோ, பெற்றோரோ, அரசுகளோ அதீத அக்கறை காட்டாத துன்ப நிலையே வடபுலம் உட்பட இலங்கை முழுவதுமாகக் காணப்படுகிறது. 43 இலட்சம் மாணவர்களுள் அறுபத்தைந்து வீத மாணவர்களே ஆண்டு ஒன்றிலிருந்து உயர்தர வகுப்பு வரை தேர்ச்சி பெற்றவண்ணமுள்ளனர். தேர்ச்சி பெறாதவர்கள் எல்லோருமே வகுப்பேற்றப்படுகிறார்கள். இது நியாயமானதா, வெல்ல வைக்கலாமா என்பதை யார் பரீட்சித்தார்கள்? சரி மாறாக இப்படி யோசிப்பதும் காலத்தின் கட்டாய தேவையாகும் எப்படி என்றால், ஆண்டு ஐந்தில் இருந்து பத்தாம் வகுப்பு வரை அதியுன்னத புள்ளிகளை எல்லாப்பாடங்களிலும் பெறும் மாணவர்களை (டபிள் புறமோஷன்) இரட்டிப்பு வகுப்பேற்றம் செய்வதன் மூலம் பாரிய திறனாளிகளை நாட்டுக்கு மூலதனமாக்கலாம். இதுபற்றி ஏனோதானோ என்று சிந்தியாமலிருப்பது, வருத்தமளிக்கிறது. இது ஒரு தருமகாரியமும் கூட.

அரசு ஒரு மாணவனை மனிதனாக்குவதற்காக சுமார் 25 இலட்சம் ரூபா செலவிடுகிறது என்றால் யாராவது நம்புவீர்களா? இதுதொரு புண்ணியமான கைங்கரியமாகும், இதனை எவராவது அரசுக்கு தத்தமது கடமையால், ஒப்படைத்திருக்கிறோமா? எங்களெங்கள் பிள்ளைகளை பாடசாலை பயன்படுத்த வேண்டுமென்றும், பாடசாலைகளால் பயன்பெற வேண்டுமென்றும் நாமோ இறைவனை மன்றாடுகின்றோம். ஆனால் எல்லாப் பாடங்களிலும் சித்திபெறாத மாணவக் குழந்தைகள் பற்றி இனியாவது இரக்கங் கொள்வோமே – என்று எம்மை நாம் வருத்தியிருக்கிறோமா?

எப்படி இருந்த வடபுலம் இன்றோ புவியின்பத்திலும், பொருளின்பத்திலும், அற்ப சொற்ப சுகமுலாவும் விழாக்களிலும், மேள, தாள, பாண்ட் வாத்திய, மாலை, மரியாதை, ஆராத்தி, பொட்டு வைக்கும் கட்டமைப்பிலும் நேர கால வேளை பொழுதுகளை அள்ளிக்கொட்டிச் சிந்தி விரயமாக்குகின்றார்களே தவிர, நொந்தவர்கள்

நொந்தவர்களாகவே வாழ்ந்து முடிகின்றனர். இதற்குள்ளும் அபாரத்திறமையான மாணவர்கள் அதி'டம் இல்லாத குடும்ப பின்னணியில் வளர்ந்துள்ளார்கள் தூக்கிவிட்டோமா? அறுபது இலட்சம் பேர் இலங்கையில் வறுமையோடு இருந்தபோதும், வடபுலம் ஆறு இலட்சம் பேர் வறுமை எல்லையைத் தாண்டமுடியாமல் உடை நடை பாவனை உணவு உறையுள் உழைப்பின்றித் தவிக்கின்றபோது கல்வி எனும் பயிர் தூண்டல் துலங்கல் இன்றி குருக்குத்தியாகியுள்ளது. இந்நிலை தொடருமாயின் ஆலயங்களும், கோடி விளையாடும் மாடி மனைகளும் அதிசயமான மின்னியழைக்கும் மண்டபங்களும், வீம்புக்குச் செலவழிக்கும் மாம்பழ விலாச மேதாவிககளுமே யாழ்ப்பாண எச்சங்கள் என மார்தட்டமுடியும்?

வடபுலத்தில் பெரும்பாலான திறமைசாலிகள் நாளிலும் பொழுதிலும் வெளிநாட்டுக்குப் பயணமாகிய வண்ணம் உள்ளனர்.

மற்றும், தமிழர்களிடையே, மிக மிக முக்கியமான ஒற்றுமைக்கான எந்தவொரு சமிக்கையையும் எவராலும் காணமுடியவில்லையே. கதிரைகளையும், பதவியையும், இலவச உழைப்பினையும், இடாம்பீக வாழ்வினையும் கருதிய இலக்குகளினால் சம்பளத்திற்கே வடபுலம் என்றாகிவிட்டது. சாதகபலன் நன்றன்று மேதகு பிரமுகர்கள் சேதாரமின்றி கொடியேறி முடிசூடி தம்குடி காக்கின்றனர் போராடுகின்றனர்.

**கலாபூஷணம் கே.எஸ்.சிவஞானராஜா**
**ஓய்வு பெற்ற பிரதி அதிபர்**

# நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு

ஒரு மனிதனை முழுமையாக்கும் கருவியாகவே வாசிப்பு காணப்படுகிறது. எனவே நாம் ஒவ்வொருவரும் சிறுவயதிலிருந்தே வீணான பொழுது போக்குகளில் நேரத்தை செலவிடுவதற்கு பதிலாக நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

இன்று வீட்டில் இருந்துகொண்டே இணையதளங்களில் சிறந்த புத்தகங்களை வாசிக்க முடியும். என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும். வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துவதோடு சிறந்த அறிவுத் திறனையும், நுண்ணறிவினையும் வழங்குகின்றது. பரந்துபட்ட உலக அறிவினை பெற்றுக் கொள்ளவும், புதிய தகவல்களை அறிந்து கொள்ளவும் இந்த வாசிப்பு உதவுவதாகவே காணப்படுகிறது. எனவே மனித வாழ்வியலில் வாசிப்பு மிகவும் இன்றியமையாததாகும்.

“நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு” என்ற ஔவையாரின் வரிகள் இந்த உலகில் ஒரு மனிதன் எந்த அளவிற்கு நூல்களை வாசிக்கின்றானோ அந்த அளவிற்கு அறிவினை பெற்றுக்கொள்கிறான் என கூறுகிறது. மேலும் வாசிப்பதன் மூலம் பெறும் புத்தக அறிவினை மாத்திரம் பெற்றுக்கொள்ளாமல் எம்மை சூழ உள்ள சமூகம் பற்றியும், உலக அறிவினையும், பொது அறிவினையும் பெற்றுக்கொள்ள முடியும். அதாவது வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துகிறது என்கின்ற வாசகம் இதனால்தான் சொல்லப்பட்டுகிறது.

வாசிப்பு பழக்கம் மூளைக்கு சிறந்த பயிற்சியாகும். புத்தகத்தில் காணப்படும் கதாபாத்திரத்தின் பெயர்கள், இயல்புகள், நிகழ்வுகளை நினைவில் வைத்திருக்க வேண்டிய நிலை காணப்படும். இது நம் நினைவாற்றலை மேலும் வலுப்படுத்தும்.

அத்தோடு எழுத்தாற்றல், படைப்பாற்றல், சிந்தனைத்திறன் போன்ற பல திறன்களை வளர்க்க வாசிப்பு பழக்கம் உதவுகிறது.

வாசிப்பு என்பது மனிதனுக்கு சிறந்த பொழுது போக்கையும், மன அழுத்தத்தை நீக்குவதற்கான அமைதித் தன்மையையும் வழங்குகிறது. பல்வேறுபட்ட புதிய விடயங்களையும், வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களையும் கற்றுக் கொள்ளவும் வாசிப்பு உதவுவதோடு பல்வேறு தலைவர்களின் உருவாக்கத்திற்கும் காரணியாக காணப்படுகிறது. வாசிப்பு மனிதனை மேம்பாடடையச் செய்கிறது இந்த வாசிப்பினால் உயர்வை அடைந்தவர்கள் பலர் உலகில் உள்ளார்கள். அந்த வகையில் வறுமையான குடும்பத்தில் பிறந்து நூல்களை வாசித்து உலகை பற்றி அறிந்து அமெரிக்காவின் தலைசிறந்த தலைவராக திகழ்ந்த ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தியின் சத்திய சோதனை புத்தகத்தால் மாற்றத்தை உணர்ந்த மாட்டின் லூதர் கிங், பல அறிவியல் நூல்களை உருவாக்கிய அணு விஞ்ஞானி அப்துல் கலாம், புரட்சியின் தந்தை லெனின் என பல அறிஞர்களை குறிப்பிட்டே செல்லலாம்.

வாசிக்கும் போது ஒருவர் எழுத்தாளர்களின் சிந்தனை முறையை புரிந்து கொள்ள முயற்சி செய்கிறார் இது ஒருவரின் சொந்த சிந்தனை முறையை வளர்த்துக் கொள்ள உதவுகிறது. வெவ்வேறு கலாசாரங்களில் இருந்து வந்த எழுத்தாளர்களின் படைப்புக்களை வாசிப்பதன் மூலம் அவர் அந்த கலாசாரங்களை பற்றிய அறிவை பெற்றுக்கொள்வதோடு உலக கண்ணோட்டத்தின் பாதையில் பயணிக்கவும் வைக்கிறது.

வாசிக்க வேண்டிய புத்தகங்களை தெரிவு செய்வது ஒரு தனிப்பட்ட தேர்வாகும் இருப்பினும் ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய பொதுவான தெரிவுகள் சில.

**கற்பனை** – கற்பனை என்பது புதிய உலகத்தை உருவாக்குவது, புதிய கதாபாத்திரங்களை சந்திப்பதும், புதிய சாகசங்களை அனுபவிப்பதும் ஆகும். கற்பனை புத்தகங்கள் உங்கள் மனதை ஓய்வெடுக்கவும், கற்பனை திறனை ஊக்குவிக்கவும் உதவும் உதாரணமாக ஹரிபாட்டர், ஜேம்ஸ் பாண்ட் போன்றவற்றை குறிப்பிடலாம்.

**வரலாறு** – வரலாறு என்பது கடந்த காலங்களை பற்றி அறிந்து கொள்ள சிறந்த வழியாகும். வரலாற்று புத்தகங்கள் நடைபெற்ற நிகழ்வுகள், முக்கிய மனிதர்களின் வாழ்வியல் குறிப்புக்கள் பற்றியும் அறிய உதவும் உதாரணமாக த வெர்ல்ட் கிஸ்ரி

(The World History), த கிஸ்ரி ஒவ் அமெரிக்கா (The History Of America) போன்றவற்றை குறிப்படலாம்

**புனைகதை** – புனைகதை என்பது உண்மை நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டிருந்தாலும் கதைகளின் தன்மையை மாற்றி ஆசிரியரின் கற்பனை எண்ணங்களையும் உள்ளடக்கி தொகுக்கப்படுவது ஆகும். புதிய சிந்தனை உருவாக்கத்திற்கு இதன் பங்கு அளப்பெரியது ஆகும்.

**புதிய அறிவு மற்றும் செய்தி** – ஒரு செய்தி அல்லது புதிய அறிவு என்பது அறிவை மேம்படுத்த உலகியல் பதிய தகவல்களை பற்றிய அறிவை தெரிந்து கொள்ள உதவும்.

ஒரு நல்ல நூல் நல்ல நண்பனுக்கு சமம் ஆகும். எனவே எம்மால் எந்த அளவுக்கு வாசிக்க முடியுமோ அந்த அளவுக்கு வாசித்து எமது அறிவினையும் விருத்தி அடைதலை மேற்கொள்ளுதல் அவசியமாகும். சமூக தொடர்பு சாதனங்களை நம்பியே எமது வாழ்வியலை தொலைக்காமல், பயன்படு தன்மையை மட்டும் பெற்றுக்கொள்ளல் முக்கியமானதாகும் இன்றைய தொழில்நுட்ப வளர்சியின் காரணமாக இணையவளியே நூல்களை வாசித்துக்கொள்ள முடியும், ஆகவே வாசிப்பு எப்போதும் மனிதனுக்கு நன்மை பயக்கக் கூடியதாகும் என்பதை உணர்ந்து, நம் அறிவுப்பசியை அதிகரிக்க வாசிப்பை பயன்படுத்த வேண்டும்.

**திருமதி கலாவல்லி பாலசுப்பிரமணியம்**
**(ALA Sri Lanka)**
**ஓய்வு நிலை பிரதி பிரதம நூலகர்**
**பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்**

# மருவிச் செல்கிறது...

காலைக்காற்று பலமாய் வீசிட
வீணே கழிந்தோடுகிறது ஒவ்வொரு நொடிப்பொழுதும்
தொழில்நுட்ப வளர்வின் சிறைப்பிடிப்பால்
தனிமைப்படுத்தப்பட்டு விட்டோம் கால ஓட்டத்தில்

தம்மையே அறியாது இதனுள் சிக்கி
தொலைசாதனத்துக்கும் போதைக்கும் அடிமையாகி
கல்வியை இழந்து வாழ்வை தொலைத்து
எறிய மறுத்து நிற்கும் நிலாக்கள்.....

இரவு பகலாய் தொலைபேசி கணினியுடன்
எற்நேரமும் முளைத்தெழும் பல்லாயிரம் பிரச்சினைகள்
மன அழுத்தம் நெஞ்சை அடைத்திட
கழுத்தை அடைக்கிறது தூக்குக்கயிறு..

குண்டுவெடிப்பு கொரோனாவுடன் ஓர்நாலு வருடங்கள்
வீழ்ந்து விட்டது நம் நாடு படுபாதாளத்தில்...
வாசிப்பு என்ற ஒன்று அன்று இல்லாதிருந்தால்
இன்று எம்நாடு எங்கோ தொடுவானில்!

மங்கி விட்டது நூல் வாசனை
மருகி விட்டது வாசிக்கும் வழமை
பல்கிப் பெருகியது குற்றச் செயல்கள்
தொலைத்தே நிற்கிறோம் எம்மை.

காற்றில் தொலைத்துவிடும் தீராத் துயர்கள்
பயிர் செழிக்கும் பாலை வனத்திலும்
ஊற்றெழுந்திடும் நல்லெண்ணங்கள்
ஏற்றி வைத்திடும் வெற்றி சிகரத்தில்...

பிறவிப் பெருங்கடலில் ஆர்ப்பரிக்கும் அலைகளிலும்
மகிழ்வாய் நலமுடன் கரையேற்றிடும் தோணியாய்
வாசிப்பெனும் போதை எம் சமூகக் கடலில்
உடுக்கள் பல தோன்றிடும் எம் மனத்திரையில்....

இலக்கியப் பூஞ்சோலையில் பெரு விருட்சங்களாய்
கம்பன் முதல் பாரதி வரை...
அழகே காய்த்துக் குலுங்குகின்றன
பல்லாயிரம் நூற்கனிகள்...
நல்வழி சேர்த்திட நீதி நூல்கள்
நல்லறத்தை வகுத்திட அற நூல்கள்
வாழ்வியலை செப்பிட பற்பல நூல்கள்
உள்ளனவே ஆழம்காணாய் கடலாய்..

இவ்வுலகுதனை நீ காண வேண்டுமானால்
எங்கேயும் சென்றிட வேண்டியதில்லை
தலை குனிந்தபடியே பல நூல் வாசி
தலை நிமிர்ந்தே பார்திடும் இவ்வுலகு

ஏற்ற இறக்கம் தளர்ந்திட சமூகம் தழைத்திட
கற்பனை வளர்ந்திட சிந்தனை உயர்ந்திட
நல்வழி தேர்ந்திட வாழ்வு சிறந்திட
வழிகோலும் வாசிப்பு, அது நம் சுவாசிப்பு

பிஞ்சுப்பாலகரை செதுக்கி சிலையாக்கிட
வேறேதும் வேண்டுமா? புத்தகத் தோழனை விட
அனைத்து தினத்திற்கும் வருடத்தில் ஒரு நாள்தான்
ஆனால் இதற்கு மட்டும் இங்கே ஒரு திங்கள்.

**கபிஷாயினி ரவிக்குமார்**
**தரம் 12 (கணிதப்பிரிவு) யா/திருக்குடும்ப கன்னியர் மடம்**

# வாசிப்பற்ற தேசம்

இன்றைய காலத்தின் நவீன வளர்ச்சி உலகத்தையே சுருட்டி கைகளுக்குள்ளேயே புதைத்து விட்டுள்ளது. வீடுகளுக்குள்ளேயே அடைந்து போய் வெளியுலகம் மறந்து போய் வெறுமனே தொலைபேசிகளுடனான வாழ்க்கை முறைக்குள் நாம் வாழப் பழகிக் கொண்டுள்ளோம். கற்பனை உலகிற்குள் நிகழும் நிகழ்வுகளை எம் வாழ்வின் பயணங்களாக எண்ணிக்கொள்கிறோம். நவீன காலத்தின் வளர்ச்சிகள் எல்லாம் பயனுள்ளவைக்கான கண்டுபிடிப்புக்களாக இருந்தாலும் அவற்றின் மீதான அதீத வளர்ச்சியும் அளவற்ற கவர்ச்சியும். எமது சிந்தனை சக்தியில் மாற்றத்தை ஏற்படுத்தி எமது செயற் திறன்களை எல்லாம் மழுங்கடித்து விட்டிருக்கின்றன எனலாம். தேடித்தேடி கல்வியை பெற்ற எம் மாணவர்கள் வெறும் வகுப்பறை கல்வி முறையை நம்பியே அவர்களின் எதிர்காலம் நடைபயில்வதை அவதானிக்க முடிகிறது. வாசிப்பு பழக்கங்கங்களும், மரத்தடி விவாதங்களும், பத்திரிகை செய்திகளுக்கான எம்மவர் விமர்சனங்களும் கூட்டமாய் கூடி விவாதித்த கருத்துரைகளும் என எல்லாமே மாறிப்போய்விட்டன. வாசிப்பு பழக்கம் என்பது வெறுமனே பொழுதுபோக்கு விடயம் என்பதைத் தாண்டி பல தலைவர்களையும், அறிஞர்களையும், தத்துவஞானிகளையும் உருவாக்கி உலகிற்கு அளித்துள்ளது. ஆனால் இனிவரும் காலங்களில் அவ்வாறான உருவாக்கம் இடம்பெறுமா என்பது என் மிகுந்த ஐயப்பாடே.

''வாளினுடைய கூர்மையும் நுலினுடைய கூர்மையும் இணைந்தே ஒரு நாட்டை ஆழுகின்றது. ஆனால் நூலின் கூர்மை மாத்திரமே இறுதி ஆட்சி அமைப்பை தக்கவைத்துக் கொள்கிறது.'' இவ்வாறு இருந்த போதிலும் நாளைய சமுதாயத்தில் எதன் கூர்மை ஆட்சியமைக்க போகிறது என்பது கேள்விக்குறியே. ''நீரழவு ஆகுமாம் நீராம்பல் தான் பெற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு. என்ற ஔவையாரின் கூற்றுப்படி மனிதனை மனிதனாக்குவது கல்வியும் அதனோடு இணைந்த வாசிப்பும்

தான். ஆனால் நாம் வாசிப்பை மறந்து விட்டு தேவையற்ற பொழுது போக்குகளில் எமது கவனத்தை செலுத்துகிறோம். இதனால் எமது அறிவு ஆதாரமற்றதாய் மாறி வேற்று திசை நோக்கி பயணிக்க ஆரம்பித்து விட்டது. மாணவப் பருவத்திலேயே மதுப் பழக்கவழக்கங்களும், போதைவஸ்து பாவனைகளும், அதிகளவான தொலைபேசி பாவனைகளும் என நாளாந்த இயல்பு வாழ்க்கை முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறானது ஒரு மாற்றம் நாளைய பிணக்குவியல்களை வீதிகளில் சுமக்கப்போகும் சமுதாயமாகவே உருவெடுத்து வருகிறது.

வாசிப்பும், தேடலும் இல்லாத சமுதாயம் முழுமையாக சிந்திக்கின்ற ஆற்றல்களை இழந்து கற்பனை ஆற்றல்கள், புதுப்படைப்பாக்கல்கள், மன ஒருமைப்பாடு போன்ற இயல்புகளை இழந்து வருகிறது. எதற்கெடுத்தாலும் வன்முறை போக்குகளும், மனித மாண்பு சீரழிவுகளும், தங்கிவாழ்கின்ற மனநிலைகளும் போன்ற வாழ்வியல் முறைகளுக்குள் செருகத்தொடங்கி விட்டிருக்கிறது. வெறுமனே இணையத்தை நம்பிய எமது வாழ்வியல் எமது அனைத்து செயற்பாடுகளிலும் பிரதிபலிப்பை வெளிப்படுத்தியே நிற்கிறது. இணையத்தில் குறிப்பிடப்படும் விடயங்களின் உண்மைத் தன்மையை ஐய்யப்பட நாம் மறந்து விட்டோம். புத்தகங்களில் உள்ளவற்றை தேடிகற்பதில் எம் ஆர்வத்தை செலுத்தாது உடனடி பதில்தேடும் நிமிடஇயல் வாழ்க்கை முறைக்குள் பயணம் செய்ய ஆரம்பித்து விட்டோம்.

புத்தகங்கள் மனிதனின் தேடல்களையும் தாண்டிய தகவல்களை அவர்களுக்கு வழங்க வல்லது என்பதை மறந்து விட்டுள்ளோம். பூரணத்துவ அறிவை பெறுவதில் ஆர்வத்தினை செலுத்தாது அரைகுறை வாழ்க்கைக்குள் அன்றாட வாழ்வியலை தொலைக்க ஆரம்பித்து விட்டோம். முன்னைய காலங்களை போன்ற எமது அறிவுநிகைளும், தேடல் முயற்சிகளும் இனி இடம்பெறுமா என்பது சிந்திக்க வேண்டிய விடயமே.

இன்றைய டிஜிட்டல் யுகம் பொழுது போக்கான அனைத்து அம்சங்களையும் கொண்டுள்ளமையால் பலரும் அதிலே மூழ்கி நேரத்தை பாழ்படுத்துகிறோம். இதனால் புத்தக வாசிப்பு பழக்கம் குறைந்து செல்வதாக பலரும் கூறியே வருகிறார்கள் வாசிப்பற்ற சமூதாயம் ஒன்று எப்படியானதாக காணப்படப்போகிறது என்று நோக்குவோமானால்,

**அறிவினை இழக்கும் சமுதாயம்.**

ஒவ்வொரு புத்தகத்திலும் இடம்பெறும் விடயங்கள் கற்பனை செய்து பார்க்கக் கூடிய அறிவினை வழங்குகின்றன. பலதரப்பட்ட நூல்களை கற்கும் போது கிடைக்கும் அறிவு, ஆழமாக ஆராய்ந்து பார்க்கும் திறன், தேடல் என்பன கிடைக்காது சென்றுவிடும்.

**மன அழுத்தம்**

வாசித்தல் என்பது மனதளவில் நெருக்கமான உணர்வை உணர வைக்கும் பிரதான விடயமாகும். பல புத்தகங்கள் தம் கதாபாத்திரங்களோடு வாசிக்கும் நபரை உள்வாங்கக்கூடிய ஆற்றல் மிக்கவை. அத்தோடு மனக்கவலைகளோடு இருப்பவர்களுக்கு அதிலிருந்து விடுதலை அழிக்க வல்லவை. தேவையற்ற சிந்தனைகளிடம் இருந்து இலகுவாக்கக்கூடியது. இவ்வாறான விடயங்கள் வாசித்தலற்று போனால் கிடைக்காதுபோய் மன அழுத்தம் மிக்க சமுதாயமாக மாற்றம் அடையும்

**பல சொல் அறிவின்மை**

பெற்றுக்கொள்ளும் அறிவினை விட பலதரப்பட்ட வார்த்தை அறிவின்மையால் சொற்களஞ்சியங்களாக தொழிற்ப்படும் புத்தகங்களின் அறிவின்மை கிடைக்கப்பெறும் நிலை உருவாகும்.

**கவனிக்கும் திறன்**

ஒரு நூலை வாசிக்கும் போது அதில் ஏற்படும் கவனிப்பு சரியானதாக காணப்பட்டால் வாசிக்கும் விடயங்கள் ஆழ்மனதில் பதியும் பழக்கம் ஏற்படும். வாசிப்பு பழக்கம் குறையும் பட்சத்தில் இந்த கவனிக்கும் தன்மை என்பது குறைவடையும் நிலை ஏற்படும்

**நினைவாற்றல்**

நினைவாற்றலை அதிகரித்தலையும், வளர்தலையும் புத்தகங்களின் வாசிப்பு பழக்கமே அதிகம் ஏற்படுத்த வல்லது. நினைவாற்றலையும் அறிவாற்றலையும் கூர்மைப்படுத்தவும் இவையே பெரிதும் பக்கபலமாய் விழங்குகின்றன. வாசிப்பு பழக்கத்தின் குறைவடைதல் இவை இரண்டையும் குறைத்துவிடும்.

போன்ற பாரிய சிக்கல்களை வாசிப்பின்மை ஏற்படுத்தப் போகிறது என்பது உண்மையே. இதிலிருந்து மாறுபட்ட சமூகத்தை உருவாக்கல் என்பது கல்வித்துறைக்கும், நூலகத் துறைக்கும் பொறுப்பாகவே காணப்படுகிறது என்பது நிதர்சனமே.

**க. கீதபொன்கலன்.**
**ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்.**
**யாழ் பல்கலைக்கழகம்**

# தொலைந்து போன வாசிப்பு

## (மத்திய மிரிவு கவிதைப்போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை)

நாம் உலகில் செல்லும் பாதையின் அடித்தளமே
தொலைந்து போன வாசிப்பின் முதற்படி
உலகில் வாசிப்பை மறந்தோன் வாழ்க்கையை தொலைத்தவன் ஆகின்றான்
வாசிப்பினை அறிந்தவன் வாழ்க்கையை அறிந்தவன் ஆகிறான்.

வீட்டினுள் முடக்கம் சிறு பிள்ளைப்பராயம் - காரணம்
வாசிப்பை தொலைத்தது
இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாடு
வாசிப்பு என்பது ஒரு மொழியல்ல – அது
எங்கள் உயிர் நாடியை போன்றது.

உலகமே அடிமைப்பட்டு இருப்பது இலத்திரனியல் சாதனத்திலே
இலத்திரனியல் அடிமைப்படும் நாம் தொலைத்த வாசிப்பிற்கே
உலகமே புகழ்ந்து பாராட்டு பெற்றவன் வாசிப்பை வளர்த்தவன்
உலகமே சேர்ந்து இகழப்பட்டவன் வாசிப்பை தொலைத்தவனே.

பொது அறிவை வளர்த்து நல்லறிவு ஊட்டியது வாசிப்பே
நல்லது தீயது அறிந்திட வைத்ததும் வாசிப்பே
வீட்டினுள் தொடுதிரை வெளிச்சம் வருமுன்னே
வெளிச்சத்தை தந்தது புத்தகத்தின் வாசிப்பே.

வீட்டிற்கு அழகு சேர்த்தது வண்ணத்து பூச்சுகள்
மரத்திற்கு அழகு சேர்ப்பது காய் கனிகள்
மனிதனுக்கு அழகு சேர்ப்பது வாசிப்பு
மனத்திற்கும் அழகு சேர்ப்பது வாசிப்பு

கரம் தொடு தூரத்தில் தெரிகிறது மரணத்தின் வாசல்
சிரம் பல தாண்டி சென்றது பேசிகளின் வெள்ளம்
பாரம் பல கனக்கிறது கனவுகளின் தேசம்
தொலைத்திட துயரம் நித்தமே வாசிப்போம்.

**அ. யாமினி**
**யா/வேலணை மத்திய கல்லூரி**
**தரம் - 11**

# போதையின் பாதையில் இருந்து விடுபடுவோம் மேதைகளாய் உருவாகுவோம்

இன்றைய சமூக சீரழிவின் பிரதான காரணியாகவும், அபாயகரமானதுமாகவும் விளங்குவது போதைப்பொருட்கள் ஆகும். இவை மனித வாழ்வியலின் அடிப்படையில் தனது பாரிய மாற்றத்தை உண்டு பண்ணியதோடு. நடத்தையியலிலும் பெரும் சோக நிலையை உண்டு பண்ணியுள்து எனலாம். மாணவப்பருவம் முதல் இளமைப்பருவம் வரை இதன் தாக்கம் பரந்து பட்டுள்ளது. போதைப்பொருள் என்பது மேலை நாடுகளில் பெரும் பாதிப்புக்களை தோற்றுவித்திருந்தாலும் இது பரம்பலடைந்து கீழைத்தேய நடைமுறையியலுக்கும் உட்புகுந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. போதைப்பொருட்கள் கடத்தப்படுதலையும் பரம்பலடையச் செய்வதை தடுக்கவும் மேலை நாடுகள் பலவகை நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், தண்டனைகளை அதிகப்படுத்திக்கொண்டாலும் இதன் பரம்பல் தன்மை நிகழ்ந்தவண்ணமே காணப்படுகிறது.

இலங்கை போன்ற மிகச்சிறிய ஒரு நாட்டுக்குள் போதைப்பொருட்களும் அதன் பாவனையும் நுழைந்திருப்பது என்பது எம் நாட்டுக்கும் எம் சமூகத்திற்கும் பெரும் சாபக்கேடாகும். போரியலின் பின்னரான வாழ்வியல் மாற்றங்களுக்கு இதுவே பெரும் காரணமாகவும் அமைந்துள்ளது . இன்றைக்கு 10 தொடக்கம் 15 ஆண்டுக்குள்தான் இதன் பாவனையின் அதிகரிப்பானது இடம்பெற்றுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. சில நாசகார சக்திகளின் தோற்றப்பாடானது பாரிய அளவிலான வியாபார லாபமீட்டும் நோக்குடன் இதன் வியாபார விஸ்தரிப்பினை பாடசாலை முதற்கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறது, இது நாளைய மரண ஓலங்களின் அதிகரிப்பையும், உடலியலில் வலுவற்ற தன்மையையும், முறையற்ற உடலுறவுகளின் அதிகரிப்பையும் எம் சமூக இருப்புகளில் ஏற்படுத்தவே போகிறது.

இந்த போதைவஸ்து பாவனையானது எமது மூளைக்கு உற்சாகம் ஊட்டுவது போன்ற தோற்றப்பாட்டினை ஏற்படுத்துகிறது. மன ரீதியில் எழும் பிரச்சினைகளுக்கு தீர்வளிப்பது போன்ற மாயையும் ஏற்படுத்துகிறது. இதனால் ஏற்படும் இசைபாக்கம் என்பது மூளையின் தொழிற்பாடுகளை படிப்படியாக பாதிப்பிற்கு உள்ளாக்கி அவர்களை அதற்கு அடிமையாக்கியும் விடுகிறது. இதனால் அவர்கள் பாவிக்கும் அளவை காலம் செல்ல அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் இசைபாக்கமடைதலை மேற்கொள்ளும் உடலானது ஒரு கட்டத்துக்கு மேல் தாக்குபிடிக்க முடியாத நிலைக்கு சென்றுவிடுவதால் உடல் நஞ்சூட்மாகி மயக்கநிலைக்கு கொண்டு செல்வதோடு இறப்பிற்கும் வழிவகுத்தும் விடுகிறது.

போதை வஸ்திற்கு அடிமையாகிய நிலை உருவாகும் போது அவர்களால் அதன் பாவனையில்லாமலும், தமது வாழ்வியலை நகர்த்தமுடியாத நிலைக்கு தள்ளப்படுவார்கள். இதனால் எற்படும் பாரிய தவிர்ப்பினை சில நிமிடங்கள் கூட தாங்கிக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். இதனால் அவர்கள் அதை பெற்றுக் கொள்ள எந்த வகையான வழியையும் கையாள தயாராவார்கள். இந்த நிலமையே இவர்களை துர்நடத்தை இயலுக்கு அழைத்தும் செல்கிறது. ஒரு துளி நேர சுகத்தினை பெற்றுக்கொள்ள கொலை, கொள்ளை, திருட்டு, அச்சப்படுத்தல், வன்முறை, தடடிப்பறிப்புகள் போன்ற சட்ட விரோத செயல்களில் இவர்கள் ஈடுபட வழிகோலுகிறது. இவர்களின் இவ்வாறான சட்டவிரோத செயல்களால் சிறைதண்டனைக்கு உள்வாங்கப்படுவதோடு குடும்பத்தினருக்கும், வாழும் சமூகத்துக்கும் அழிநிலையை ஏற்படுத்தி அவர்களால் ஒதுக்கப்பட்டு தனிமை நிலைக்கு தள்ளப்டுகிறார்கள். இதனால் கவனிப்பாரற்று விடப்படுவார்கள். இந்த தனிமை ஏற்படுத்தும் உணர்வியல் இறுதியில் தற்கொலைக்கும் தள்ளியே விடுகிறது.

போதைவஸ்து பாவனையானது பலதரப்பட்ட உளவியல் சார் நோய்களை பாவனையாளருக்கு ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக மூளை வருத்தம் (Schizophrenia), மூளைப் பிசகு (Pyschosis), மன வருத்தம் (Depression) நரம்புத் தளர்ச்சி (Anxiety), மனப்பயம் (Paric sattack) என்பவற்றை குறிப்பிட முடியும் இவ்வாறு நோயியலின் தாக்கம் என்பது அசாதாரணமானது ஒன்றல்ல என்பதை அறிந்த போதிலும் அதன் பாவனை நியைில் இருந்து வெளிவருவது என்பது மிகக்கடினமே.

மூளையில் நரம்பின் தொழிற்ப்பாடுகள் இடம்பெறுவதற்கு மிகவும் முக்கியமானது முடோப்பமின் (Dopamine) என்றழைக்கப்படும் இரசாயனப் பாகு ஆகும். இந்த முடோப்பமினானது போதைப்பொருளின் பாவனையின் போது அதிகளவு சுரத்தலை நிழத்துகின்றது. இதனால் ஆரம்பத்தில் போதைப்பொருளின் நுகர்வின் போது அதிக உற்சாகத் தன்மை உருவாகுவதை உணர்வார்கள். இந்த மகிழ்வு தன்மையானது ஒரு போலித்தன்மை உடையதாகும். இனால் முடோப்பமின் ஆனது மூளையின் தொழில்பாடுகளை சிறிது சிறிதாக பாதிப்புக்கு உள்ளாக்கி கீழ் குறிப்பிடப்படும் விளைவுகளை ஏற்படுத்தும்.

- தங்களின் உடலியல் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாத தவிர்ப்பு
- அவர்களின் சிந்திப்பு சீரானதாகவோ சரியானதாகவோ அமையாது.
- ஒரு முடிவினை எடுக்கும் போது குழப்ப மனநிலை உருவாகும்.
- ஞாபகத் தன்மை குறைவடைந்து மறதித் தன்மை அதிகரிக்கும்
- மனதியல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாது அதிக சினத்தன்மை, தேவையற்ற சீறிப்பாயும் நிலை
- இவர்கள் தோற்றுவிக்கும் நடைமுறைப்படுத்தல்கள் சரியானது ஒன்றாக அமையாது.
- இதயத்துடிப்பின் அதிகரிப்பு, திடீரேன ஏற்படும் மூச்சுத்திணறல்கள் மரணத்திற்கான அச்சப்படுத்தலை அதிகரிக்கும்
- உடல் வலிமை குறைவடையும்
- தனிமையில் உளறும் நிலையும், தேவையற்ற தொடர்பாடல் நிலையையும் உருவாக்கி மனதளவில் தாக்கத்தை தமக்கு தாமே ஏற்படுத்திக் கொள்வார்கள்.

போதைவஸ்து பாவனையில் பாதிக்கப்பட்டவர்கள் அதில் இருந்து விடுபடுவதற்கும் வழிமுறைகளும் காணப்படவே செய்கின்றன ஆனாலும் அவற்றை பெற்றுக்கொண்டு விடுபடவும் வாழ்வை இன்புற்று வாழவும் அவர்கள் விரும்புவதில்லை. தமது வாழ்வியலை மரணத்தின் முடிவுக்குள் கொண்டு செல்லவே விரும்புகிறார்கள்.

இதிலிருந்து விடுபட மருந்து வகைகளும் காணப்படுகின்றன அத்தோடு நன்னடத்தை வழிமுறைகளும், உளவியல் ஆற்றுப்படுத்தல்களும், மருத்துவ உதவிகளும் கிடைக்கவே செய்கின்றன தாமதமின்றி மருத்துவ உதவியை நாடுகிறோமோ அதிலிருந்து புதிய வாழ்க்கையை பெற்றுக்கொள்ள முடியும். போதையின்

பாதிப்புக்குள்ளானவர்களை ஒதுக்கிவைக்காமல் அவர்கள் மீது கருணை காட்டுவோம் அவர்களை சிகிச்சை முறைக்குள் அனுப்ப வழிசெய்வோம். நிறைவடைதலுக்கு பின்னரான வருத்தத்தை விட முன்னராகவே பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம். அதிக பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்கள் மேல் கவனத்தை செலுத்தி சிறுமலர் மலருமுன்னே கருகாமல் பாதுகாக்க ஒவ்வொரு பெற்றோரும் முன்வருவோம்.

**ஜோசப் பேர்டினன்ஸ்**
**பொது சுகாதார பரிசோதகர்**
**பாடசாலை வைத்திய அதிகாரி பணிமனை**

# உலகை வெல்ல வாசிப்பே சிறந்த வழி

## (கீழ்ப் பிரிவு போட்டியில் முதலிடம் பிடித்த கட்டுரை)

வாசிப்பானது மனிதனை பூரணமடையச் செய்கிறது. நாம் வாசிப்பது புத்தகங்கள் மட்டுமன்றி செய்தித் தாள்கள், துண்டுப் பிரசுரங்கள், கதைப்புத்தகங்கள் போன்றவற்றை வாசிப்பதால் அறிவும் ஆழுமையும் விருத்தியடைகிறது. ஒரு மனிதன் வாசிப்பதால் அவனுக்கு பலதரப்பட்ட நன்மைகள் கிடைக்கின்றன. அவனது மூளை வளர்ச்சியடைகிறது, வினைத்திறனுடன் செயற்பட வைக்கிறது, சிந்திக்கும் ஆற்றல் விருத்தியாவதுடன் தேடல் அதிகரிக்கவும் செய்கிறது, பிழையின்றிய வாசிப்பும் பிழையற்ற சொல்லுருவாக்கமும் உருவாகிறது. அத்தோடு உலகின் பாதையில் சென்று அதன் அபிவிருத்தியில் தடம் பதித்து இறுதியாக அதை வெல்லவும் வாசிப்பு பெரிதும் உதவுகிறது.

வாசிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அதை கிரகித்து மனதில் பதிவேற்றம் செய்து கொள்வதால் மாத்திரமே வாசிப்பின் பயனை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு மாணவன் வாசிப்பதால் அவன் பெற்ற தேடலைக் கொண்டு நடைபெறும் பரீட்சைகளில் முழுமையான விடையெழுதலின் ஊடாக நல்ல பெறுபேறுகளையும், நல்ல புள்ளிகளையும் பெற முடியும். அது மட்டுமன்றி சுயமாய் சிந்திக்கும் ஆற்றல் விருத்தியடையும், வாசிப்பின் அறிவை பெற்றுக்கொள்ளாமல், வாசிப்பதற்கு எதுவுமில்லை, வாசிப்தற்கான சோர்வுத்தன்மை போன்ற வற்றால் வாசிப்பை உதறித்தள்ளாமல் "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதற்கு இணங்க வாசிப்பதற்கு இன்னும் நிறையவே காணப்படுகிறது. கவிதைகள், கட்டுரைகள், பொது அறிவுகள், பொது விடயங்கள், கதைகள், மதம் சார் அறிவுகள், பரந்து பட்ட அறிவியல் என பலதரப்பட்ட புத்தகங்கள் காலத்துக்கு காலம்

வெளிவந்தவண்ணம் உள்ளது. வாசிப்பை எமது நாளாந்த செயற்பாடுகளில் ஒன்றாக்குவதன் மூலம் சிறந்த சமூகத்தின் பிரஜைகள் ஆக முடியும்.

வாசிப்பதற்கு வயது எல்லையாக அமையலாகாது. யாரும், எவ்வயதினரும் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியும். பெரியவர்களின் வாசிப்பு அவர்களின் தனிமையின் பொழுதுபோக்காய் அமையக் கூடம். இளைஞ்ஞர்களின் வாசிப்பு தேவையற்ற சிந்தனைகளை குறைக்கக்கூடும், மாணவர்களின் வாசிப்பு கல்வியில் சிறந்து விளங்க உதவும். மேலும் சிறுவயதில் தொடங்கும் வாசிப்பு முதுமை வரை அவர்களுக்கு பயனுள்ளதாக அமைவதோடு, அவர்களை மேதைகளாகவும் உருவாக்க வல்லது. அவர்களுக்கு எழும் பிரச்சினைகளுக்கு தீர்வை அவர்களே தேட இலகுவாய் அமையும்.

ஆனால் இன்றைய பிள்ளைகளின் வாசிப்பு பழக்கமானது மிகக் குறைவே. கைத்தொலைபேசி பாவனையின் பிரதிபலிப்பாக அவர்கள் வீட்டை விட்டு புறப்படாது வீட்டிற்குள்ளேயே முடக்கம் பெறுகிறார்கள். இன்றைய மாணவர்கள் தன்னிச்சை போக்கு மிக்கவர்கள். யார் சொல்லும் நல் விடயங்களையும் ஏற்றுக்கொண்டு நடக்ககூடிய நிலைப்பாடானது மிகக் குறைவே. இவர்களின் தொலைபேசிப் பாவனைகள் குறைக்கப்பட்டு புத்தகங்களின் பாவனையை அதிகரிப்பதன் வாயிலாகவே அவர்களை நல்ல பிரஜைகளாக உருவாக்க முடியும். இவர்களை உருவாக்க இந்த நடவடிக்கைகளை வீடுகளில் இருந்தும், பாடசாலைகளில் இருந்தும் ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு கடமைகளும் சரிவர நிறைவேற்றப்பட்டாலே தன் வெல்வதற்கான சிறந்த வழிகளை உருவாக்க முடியும்.எனவே உலகை வென்று சிறந்து விளங்க வாசிப்பே சிறந்த வழி என்பதை ஏற்றுக்கொண்டு செயற்படுத்துவோம்.

**கஜேந்திரன் நிஷாயினி**
**யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்**
**தரம் - 08**

